# ஸ்ரீ குமரகுருபரர்



சித்திரை 1 (14—4—83)
தொகுதி 5 பகுதி 7

உ

சிவ சிவ

# 'ஸ்ரீ குமரகுருபரர்'

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய — இலக்கியத் திங்கள் இதழ்.

சிறப்பாசிரியர்.

பேராசிரியர்

திரு. அ ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

ஆசிரியர் குழு:-

திரு மு. அருணாசலம், M. A., திருச்சிற்றம்பலம்

திரு. கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், மதுரை

மகாவித்துவான்

திரு. சி. அருணைவடிவேல் முதலியார், அண்ணாமலைநகர்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T.,

காஞ்சிபுரம்

புலவர் திரு. கீரன், லால்குடி

டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A., Ph.D.

மதுரை

திரு கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்

திரு. பொ. முத்தரசு M. A., ஸ்ரீவைகுண்டம்

அட்டையில்:

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருவுருவம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொரன்றைக் கண்ணி யவர்.

18666

# அருள் பழுத்த கனிச்சுவை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

நான் என்று ஒரு மனிதன் குறிப்பிட்டுப் பேசினுல் அது ஆத்மாவைக் குறிக்குமா? சரீரத்தைக் குறிக்குமா?

ஆத்மாவைத்தான் குறிக்கும். அதிலே சந்தேகமே இல்லை.

'நான் வென்றேன்' என்பதில் நான் என்பது ஆத்மாவைக் குறிக்கலாம்; 'நான் தின்றேன்' என்று மார் தட்டிச் சொல்லும் போது 'நானும்' ஆத்மாவைக் குறிக்காது; தின்னுதலும் ஆத்மாவின் தொழிலன்று; கரங்களும் ஆத்மாவைச் சுட்டவில்லை; சரீரத்தையே தட்டியது—நான் என்பது ஆத்மாவைச் சுட்டுமா?

எந்த உதாரணமானுலும் மூல இயக்கமான-சக்தியான-ஆன்மாவின் செயற்பாடே வெளிப்படும். சரீரமும்

ஆன்மாவும் இணைவுநிலையில் இருக்கும் போது சரீரத்திற்கு அநுகூலமான தொழிலாயினும், இயக்கும் ஆன்மாவே நான் என்பதனுல் சுட்டப் பெறும்.

உயிர், சீவன், இயமானன் (எஜமானன்), ஆன்மா என்பன ஒரு பொருட்கிளவிகள். அதாவது இந்தச் சொற்கள் அனைத்தும் சரீரத்தின் மூல இயக்கச் சக்தியாகிய ஆவியையே குறிக்கும். உயிர், ஆவி என்ற சொற்களைக் காட்டிலும் மற்றைய சொற்கள் திண்மையான பொருளழுத்தம் உடையவை.

சரீரம் சம்பந்தமான கடமை உரிமைகள் தாய்தந்தை முதலியோருக்கு அமைவது போலச் சீவனை உயர்த்தும் உரிமையும் கடமையும் குருநாதரைச் சேர்ந்தது. குருநாதன் அதற்காக எடுக்கும் முயற்சி அவரளவுக்கு எளிமையானதாகலாம். ஆனுல் அரியவை; அருமையானவை.

மனிதன் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் ஆதிக்கத்தால் மேலோங்காமல் தவிக்கிருன். நல்லூழ் உள்ள ஒருசிலருக்கே நல்ல குருநாதன் வந்து ஆணவ கன்ம மாயைகளை வேருடன் களைந்து அருள் பாலிக்கிருன்.

மலம் அற்றவரை அமலன் என்பர். ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் என்னும் குருநாதர் தனக்கு அமல நிலையைத் தருகிருர் என்று ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் இவ் வெண்பாவின் தொடக்கத்தில் குறிக்கிருர்.

'எற்கு அமலம் செய்யும் எழில் மாசிலாமணி' என்பது இவ்வெண்பாவின் தொடக்கம். மலங்களும் மாசுகளே. மலங்களை நீக்கும் அவர் தன்பாலும் அவை ஒட்டாமல் காக்கும் நிலைமையைச் சுட்டவே எழில் மாசிலாமணி என்ருர். இங்கு எழில் என்றது உலகோர் கூறும் சாமான்ய அழகினின்றும் வேறுபட்டதாகிய மலமகன்ற அருளாரழகு

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகரின் வேறற்றவராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அவர்களின் ஊர் எது என்றால் கமலைஎன்று குறிப்பதும் பொருத்தமாகுமன்றோ? கமலை என்பது திருவாரூர்.

"ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அவர்களைத் தெரிசிப்ப தற்காகத் திருவாரூர் என்னும் திருத்தலத்தில் அடியெடுத்து வைத்தேன். ஸ்ரீ மாசிலாமணி தேசிகரின் பொற்றாமரை போன்ற திருவடிகளைச் சிரசின்மேலே தாங்கி அலங்கரித்துக் கொண்டேன். 'நான் (முன்பு குறிப்பிட்டபடி சீவன்) ஒரு மாத்திரை குறைந்தேன்' என்கிறார்.

சீவன் — 3½ மாத்திரை (சீ—2 மாத்திரை)
சிவன் — 2½ மாத்திரை (சி—1 மாத்திரை)

மாத்திரை என்பது எழுத்து ஒலிக்கும்நேர அளவு. அது இயல்பாகக் கண் இமைக்கும் நேர அளவு அல்லது கைந்நொடிக்கும் நேர அளவு கொண்டு அளக்கப்பெறும்; நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரை. குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரை.

குருநாதரின் திருவடியைச் சிரமேற் கொண்ட வுடனேயே சீவன் சிவனாயிற்று என்பது இப்பாடலின் கருத்து. இவ்வாறு கூறுவது 'மாத்திரைச் சுருக்கம்'. என்னும் சொல்லணியாகும். பாடல் வருமாறு:-

"எற்குஅமலம் செய்யும் எழில்மாசி லாமணிதன்
பொன்கமலம் சென்னி பொலிவித்தேன்—நல்கமலை
ஊரில் குறுகினேன் ஒருமாத் திரைஅளவுஎன்
பேரில் குறுகினேன் பின்'

[எற்கு - எனக்கு; அமலம் - மலமற்றநிலை; எழில் - அருளாரழகு; கமலம் - தாமரை; சென்னி - சிரம்; பொலி

வித்தேன் - பொலியச்செய்தேன்; கமலை - திருவாரூர்; மாத்திரை - ஒலிக்கும் நேரம்; என்பேர் - சீவன்; குறுகுதல்- சுருங்குதல்]

திருவாரூரை அடைந்த உடனேயே சீவன் சிவனாகிக் குறுகியது என ஓர் உரை சொல்வதும் உண்டு. அவ்வுரை குருநாதன் வதியும் தலத்திற்கே மிகுபெருமை உண்டு எனக்காட்டும். அவ்வாறு தலத்தை அடைந்த உடனேயே சீவன் சிவனாயிற்று எனப் பொருள் கொள்வார் தருமையில் ஸ்ரீமாசிலாமணி தேசிகர் அவர்களின் பொற் கமலம் சென்னி பொலிவித்தேன்; பின் நற்கமலை ஊரிற் குறுகினேன். சீவன் சிவனாயிற்று; என விரிவு கூறுதல் தகும். அவ்வாறின்றிக் கமலை குறுகியவுடன் சீவன் சிவனாயிற்றெனின் சிவனாகிய நிலையில் மாசிலாமணிதன் பொற்கமலம் சென்னி பொலிவித்தல் ஏலாதது. இப் பாடலில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவர்களின் உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் விளக்கும் சொல், நாள் என்னும் வாய்பாட்டான் முடிந்த 'பின்' என்னும் சொல்லேயாகும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவர்கள் அடைந்த முத்திப் பேறு சாரூபம் எனப் பெறும். சாரூபமாவது சிவன் உருவமே ஆதல். பின்னர்த் தாம் பெறவிருக்கும் பேரின்ப நிலையை இவ்வெண்பாவினால் முன்னரே உணர்த்தியிருக்கும் மிகுபெருஞ் சிறப்பை நினைந்து இன்புறுவோமாக.

—சிவ சிவ

# சித்தாந்த சாத்திரங்கள்

## மு. அருணாசலம்

### 3. பழைய அனுபூதி உரை

இவ்வுரை 1962-ல் சைவசித்தாந்த மகாசமாஜ 57—ஆம் ஆண்டு விழா மலராக எம்மால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இது சிறந்த அனுபவப் பொருளைக் கூறுவது. உரை செய்தவர் காழிக்கண்ணுடைய வள்ளல். இவர் சிறந்த அனுபூதிமான். மெய்கண்ட பரம்பரையில் வந்தவர்; உமாபதிக்குப் பின் அருள் நமச்சிவாயர், காழிக்கங்கை மெய்கண்டார், சீகாழிச் சிற்றம்பல சரணாலயரான கண்ணுடைய வள்ளல் என்பது இவரது மரபு. இவர் 15ஆம் நூற்றாண்டில் சீகாழி யில் கண்ணுடைய வள்ளல் ஆதீனம் அமைத்தார். இந்த நூற்றாண்டில் அவ்வாதீனம் மறைந்து விட்டது. இவர் நியதிப்பயன், ஞானாகரம் தந்திர விளக்கம், மாயபிரகலாபம்முதலான பல நூல்கள் செய்தவர். மிக்க சிறப்புடைய நூல் ஒழிவிலொடுக்கம் என்ற பெருநூல். இதை இராமலிங்க சுவாமிகள் தாமே பதிப்பித்தது கொண்டு இவ்வாசிரி யருடைய பெருமை அறியலாம். இவருடைய திருக்களிற்றுப்படியார் உரை அனுபவப் பொருளை நன்கு விளக்குவது என்று முத்து சு. மாணிக்கவாசக முதலியாராயிருந்த ஸ்ரீ ஞானப்பிரகாசசுவாமிகள் பல முறை போற்றிக் கூறியிருக்கிறார். முன் காட்டிய 'பொருளும் மனையும் அறமறந்து' என்ற பாடல் இவர் செய்தது. இவர் உரை யானது விளக்கமாகவும் அனுபூதியாகவும் இருப்பதோடு, பாடல் தோறும் முதற்பாடலில் தொடர்பை விளக்குகின்ற சிறு அவதாரி கையும் உடையது. இது பயின்று பயின்று பெரிதும் சிந்திக்கத்தக்கதாய் உள்ள உரை. எல்லா உரைகளிலும் இதுவே காலத்தால் முற்பட்ட உரை. முற்கூறிய இரு உரைகளும் இதற்குப் பிற்பட்டனவே.

### 4. உந்தி களிறு இணைப்புரை

இலக்கணம் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் வைத்திருந்த உரை என்ற பெயரில் ஓர் உரை உந்தியையும் களிற்றுப் படியாரை யும் ஒருங்கிணைத்து எழுதி வெளியிடப் பட்டுள்ளது (1951). இதில் உந்திப் பாடலுக்கும் அதற்கு நேரான திருக்களிற்றுப்படிப் பாடல் களுக்கும் பொருத்தி உரை செய்யப்பட்டுள்ளது. இது பழைய உரையா அல்லது தம்பிரானவர்களுடைய குறிப்புக்களா என்பது விளங்கவில்லை. எனினும் சிறப்புடையது.

### 5. ஆலாலசுந்தரம்பிள்ளை உரை

காஞ்சி ஆலாலா சுந்தரம் பிள்ளை (1852 — 1922) செய்து சித்தாந்த போத ரத்திஞகர மென்னும் புத்துரை என்ற பெயரால் அவரே வெளியிட்டது. காலம் குறிப்பிடவில்லை சூர்ணிகை, பொருள் நிலை முதலான பல விசேடப் பகுதிகளை உடையது. இதனுள் ஆசிரியர் திருவுந்தியார் திருகளிற்றுப்படியார் இரண்டையும் ஒருங்கு வைத்து விளக்கம் தருகிருர். இரண்டு சாத்திரங்களுக்கும் இது ஒரு சிறந்த பாஷ்யம் போன்றது. இவர் பெரியபுராணத்தில் ஒரு பகுதிக்கும் திருப்போரூர்ச்சந்நிதி முறைக்கும் உரை செய்துள்ளார். மேற்கூறிய உரைகள் ஒவ்வொரு வகையில் சிறப்புடையனவாயினும், இவர் உரை எல்லாவகையானும் பெருஞ்சிறப்புடையது.

இவ்வைந்து உரைகளையன்றிச் சமீப காலத்தில் வேறு புதிய உரைகளும் தெளிவுக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. (வளரும்)

---

# ஸ்ரீ ராம்கிருஷ்ண விஜயம்

## [ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி சிறப்பிதழ்]

[வெளியீடும் கிடைக்குமிடமும்:- ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-600004; பக்கம்- 4+35+4; தனிப்பிரதி விலை- ரூ 1-20]

தமிழகத்தின் பிரசித்தி பெற்ற ஆன்மீகத் திங்களிதழ்களில் ஒன்ருன ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்- பங்குனி இதழ் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி சிறப்பிதழாய் அம்மகானின் அருட் பொலிவுமிக்க திருக்கோலத்துடன் வெளிவந்துள்ளது.

'அப்பரின் புரட்சியை' 'அருள்மொழியரசு' 'அப்பன் நீ' என்ற தொடக்கத்துப் பாவின் வாயிலாக வெளிப்படுத்துகிருர்.

அற்புதத் திருவந்தாதியின் 97-வது பாடல் கி. வா. ஜ. வின் கைவண்ணத்தால் 'செந்தீஅழல்' வண்ணத்தைச் சுட்டுகிறது:

'தெரிந்த, வழக்கில் உள்ள சொற்கள்; சமயச் சடங்குகள்' ஆனல் அவற்றின் பொருள் பலர்க்கும் புரியாது, புரியவைக்கிறது 'கும்பாபிஷேகம்':

மன அலைகளின் ஆற்றல் நிறுவப் பெறுகிறது.

மற்றும், அருள்வாக்கு, ஆன்ருேர் வாக்குகள், கதை, விஞவிடை, ஆன்மீகச் சிந்தனைப் பகுதிகள் இதழுக்குச் சிறப்பைச் சேர்க்கின்றன.

—புலவர் முருகு. சுவாமிநாதன்,
பனசை.

# சொல் மாண்புடை அன்னை சுமித்திரை

எம். பி. நிர்மலா எம் ஏ. வருவாய்க் கோட்டாட்சியர்,
மயிலாடுதுறை.

சுமத்திரை — கம்பனைப் பாராட்டுதல்

சுமித்திரை — அனைவரிடத்தும் தோழமையுடையவள் என்ற எந்தன் குணம் பற்றிப் பிறந்த பெயருடன் என்னை இராம காதையிலே படைக்கின்றான் கம்பநாடன். தயரதன் மனைவியர் பொன் கோசலை, தோகையியல் கைகேயி வரிசையில் இளந்தேவி சுமித்திரை இராம காதையில் இரு காண்டத்தில் மட்டும் காட்டி மறைக்கின்றான் கம்பன். எனினும் எந்தன் பண்பு நலத்தால் கற்றார் மனத்தில் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொடுக்கின்றான். தான் தற் புகழ்தல் தகுதியன்றாயினும், செய்நன்றி கொன்ற பாவத்தைச் செய்யாமல் கம்பன் என்னை நலம் பாராட்டிய விதங் கூறி அவன் தன் நயந்தை நான் போற்றுகின்றேன்.

'சொல்லின் செல்வன்' என்று அனுமன் சொல் நயந்தன்னை இராமன் பாராட்டியதனை இத்தமிழ் கூறு நல்லுலகமறியும் ஆயின் குடத்து விளக்காகத் திகழும் பெண் தனக்கும் ஒரு சிறப்புப் பட்டத்தினைச் சூட்டியுள்ளான் கம்பன். செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்லும் நிறைமொழி மாந்தர்தம் சொற்களும் மாண்புடையன என்று குறள் கூறும். இம்மாட்சிமைக்கு ஓர் உருவாய்த் திகழும் சுமத்திரையாம் எனக் களித்த பட்டம்.

'சொல் மாண்புடை அன்னை சுமித்திரை'

சொல் மாண்பு உடையவளாயின் பலபடப் பேசுதல் வேண்டும் ஆயின் சின்மொழி மடந்தைக்கு இச்சிறப்பை ஏன் கம்பன் அளித்திருக்கின்றான் என்று ஆய்தல் நலம் பயக்கும். குணமெனும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேனும் காத்த லரிது என்றும், குணமேறி நின்றாடும் வெகுளியைக் காத்தலரிது என்றும் விற்பிடித்து நீர்க்கிழிய எய்த வடுப் போன்று கண் தோன்றி மறைவது சீரொழுகு சான்றோர் சினமென்றும், சான்றோரால் கூட கடத்தலரியது சினம் என்றும் தமிழ் நூல்கள் செப்பும். ஆயின் கடல் போன்ற துன்பம் வந்துற்ற காலையும், இரண்டு கன்று ஒரீஇ வெருவரும் ஆ போன்ற சுமத்திரை, 'மகனும் மகனும் தன் கண்கள் போல்வார் தண்டா வனம் செல்வதற்கே சமைந்தார்கள்' என்ற செய்தி ஈர்வாள் போன்று இதயத்தைப் பிளந்துள்ள காலையும்,

'யாதும்' என்பது தகுதியினுலே யும் குறைவிலே என்று எடுத்துக் காட்டும். Qualitative, quantitative எப்படிப் பார்த் தாலும் குறைவு கிடையாது

அருளாளர்களின் கொள்கை வழி என்னவென்ருல் சமுதாயத் திலுள்ள மக்கள் நன்ருக வாழ வேண்டுமென்பதுதான். சமுதா யத்திலுள்ள மக்கள் நன்ருக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இதைப் பாடினுர்கள். ஏன் ஐயா இதைப் பாட வேண்டும்? அன்றைக்குச் சமுதாயம் எந்த நிலைமைக்குப் போய்விட்ட தென்ருல், கண்டமுட்டுக் கேட்ட முட்டுச் சொல்கிற அளவுக்குப் போய்விட்டது. உளுத்துப் புரை யோடிப்போன சமுதாயம். சும்மா திருந்து என்று சொன்னுல் இருந்தமாட்டான் ஸ்வாமிகளே, வயது 60 ஆகிவிட்டது, இனி மேல் போகிற வழிக்கு நல்ல வழி தேட வேண்டும் என்று இன்றைக்குக்கூடச் சொல்லு வார்கள். 'இனிமேல்' என்ருல் இதுவரை பண்ணவில்லை என்பதை ஒத்துக்கொள்கிருர்கள். போகிற வழிக்கு நல்ல வழி இனி மேல் தேட வேண்டுமென்ருல், இதுவரையில் தேடவில்லை என்ருகிவிட்டதல்லவா. அந்த அடிப்படைத் தவற்றைத்தான் அவர் அடிக்கிருர். நீ இப்படி நினைக்காதே, யாரோ சொல்லிக் கொடுத்தார் என்று. இங்கேயே செம்மையாக வாழ். செம்மை யாக வாழ்தல் என்ருல் என்ன? சுந்தரமூர்த்தி விளக்கம் சொல்லு வார். அவர் உணவு, உடை முதலியவற்றின் பட்டியலே சொல்ல வல்லவர். ஏனென்ருல், அவர் எல்லா நலன்களேயும் அநுபவித்தவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''மூன்று வேளையும் மனிதன் என்ன சாப்பிட வேண்டும்'' என்று சொல்கிருர். அவர் அனுபவித்தவர். அனுபவித்தவர்தானே சொல்ல முடியும். அவர் மாப்பிள்ளைக் கோலத்தில் இருக்கிறவர். உண்மையாகவே அரிசி எங்கே யிருந்து வருகிறது என்பதுகூடத் தெரியாத செம்மாந்தநிலே. அந்த அளவுக்கு அந்த அருளாளருக்குக் கொடுத்துக் கொண்டிருந்தான் குண்டையூர்க் கிழவன். அவர் தான் அதைப் பற்றிச் சொல்ல முடியும்.

ஆக முழு வாழ்க்கை என்பது எந்தவிதமான இன்பத்தையும் குறைத்துக் கொள்ளாமல் வாழ்கிற வாழ்க்கை. இப்போது சமுதாயத்திற்கு, இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையும், இவர்கள் சொல்லிய செற்களும் பயன்படு கின்றன. எல்லாவற்றையும் விட்டுவிட்டு,ஓடி ஓடி, என்னவோ பண்ண வேண்டுமென்று நினேக் கிற சமுதாயத்தைப் பார்த்து, 'நீ தப்பு பண்ணுகிருய்' என்று சொல்லவில்லை; ''ஜாக்கிரதை'' என்று சொல்கிருர்.

'That is first class Phychology'

ஒரு குழந்தையைப் பார்த்து, டேய் இங்கே வா, ஏன் பள்ளிக் கூடம் போகவில்லே என்ருல் 'போகலே' என்று ஒரே வார்த்தையில் பதில்வரும். நீங்கள் எவ்வளவு வேகமாகக் கேட்கிறீர்களோ அது போலப் பதிலும் வரும்.

எங்கள் தகப்பனுர் ஒரு கதை சொல்லுவார். ஒரு தகப்பனுர் ரோடில் நடந்து போய்க் கொண்டிந்தார். ஒரு தறுதலே, பீடி சாப்பிட்டுக்கொண்டு வந்தான். புத்தியுள்ள தகப்பனு இருந்தா. அப்படியே போய்விட்டு. வீட்டுக்கு வந்து பேச்சு வாக்கில் பீடி குடிப்பது நல்லதல்ல என்று சொல்லியிருப்பான். இவனுக்குக் கொஞ்சம் குறைச்சல். டேய், இங்கே வா என்ருன், பையன் போய் நின்ருன். என்னடா கைலீலே? இந்தக் கையைக்காட்டிஞன் பீடிகையில் இல்லே அந்தக் கையைக் காட்டு என்ருன் அந்தக் கையைக் காட்டிஞன், பிறகு இரண்டு கையையும் காட்டு மடையா என்ருன்.

ஆக மனித இயல்பைப் புரிந்து கொண்டு காரியம் செய்ய வேண்டும். நாயன்மார்கள் இதை மிகவும் நன்ருகப் புரிந்துகொண்டவர்கள். ஆகவே அஞ்ஞானிகளே என்று யாரையும் கூப்பிட்டு உபதேசம் செய்யவில்லே. ஏன்? நீ அஞ்ஞானி என்ருல் நீ மட்டும் ஞானியோ என்ற குதர்க்கம் தோன்றும், எனவே ஒன்றுமே அவர்கள் கண்டுகொள்ளவில்லே'

'மனிதர்காளிங்கேவம்மொன்று சொல்லுகேன் என்றுஆரம்பித்தார். 'கனிதந்தாற்கனியுண்ணவும்வல்விரே' — அத்தோடா விட்டுவிட்டார். Because response was not there. அதுபோல நாம் சொல்லுகின்றதைச் சொல்ல வேண்டும். வாழ்கின்ற முறையிலே வாழ்ந்து காட்ட வேண்டும். அதிலிருந்து படிப்பினே கற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்பு சமுதாயத்தினுடையது. இவர்கள் யாரையும் கூப்பிட்டு, நீ இன்னது செய் என்று சொன்னதே கிடையாது. வேறு எல்லாச் சமயங்களிலும் ஒன்றைப் பார்க்கலாம். கூப்பிட்டு, இப்படி வாழ வேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். சைவத் திருமுறைகளிலும், வைணவத் திவ்யப்பிரபந்தங்களிலும் நீங்கள் இதைப் பார்க்கவே முடியாது. ஏன்? Human nature -ஐத் தெரிந்திருக்கிற காரணத்தாலே." மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்" என்று சொன்ஞர்.

சுந்தரர் கல்யாணம் பண்ணிக் கொண்டார். ஒரு நாளாவது விரதம் இருந்தாரா என்பது தெரியாது. அவர் ஒரு யோகம் பண்ணிருராம். அது என்ன? யோகம் என்பது பொறி புலன்களே அடக்கி, அவற்றிலே ஏற்படும் இன்பத்தைத் துறந்து, என்னமோ பண்ணுவதுதான் என்று சொல்லிக் கொடுத்திருக்கிருர்கள். "சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்தோள் தடமுலேஆர்ந்தனன் ஆந்தனன்." இந்தப் பாட்டைப் படித்தார்

சேக்கிழாரி; அதற்கு அவர்தான் விளக்கம் கொடுப்பார். கல்யாணம் முடிந்தவுடன், ''புணர்குவடே சார்வாகப் பன்னுளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினுர்.'' மனைவியிடத்திலே இன்பமாக வாழ்தல்தான் இவர் பண்ணிய தவம். அப்படியானுல் நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது பேர் அப்படிப் பண்ணுகிருேமே, ஏன் சுந்தர மூர்த்தி மாதிரி போகவில்லை.

குதிரைக்குக் 'குர்ரம்' என்று சொல்லிக்கொடுத்த உடனே வந்து விட்டான். சரி, தெலுங்கு வந்து விட்டதென்ருன்; குதிரைக்குக் குர்ரம், யானைக்கு யர்ரம், பானைக்குப் பர்ரம் என்ருன். அதுமாதிரி சுந்தர மூர்த்திகள் ''புணர்குவடே சார் வாகப் பன்னுளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினுர்''; நாமெல்லாம் இதைப் பண்ணுகிருேமென்று வந்து விட்டோம். அங்கேதான் மாறுபாடு வந்தது. அடுத்தாற்போல் என்ன பண்ணினுர் என்பதை நின்று கேட்க நேரமில்லாமல் போய் விட்டது. அதுதான் வினை.

ஆக, மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் என்று சொல்லியதும், ஆர்ந்தனன், ஆர்ந்தனன் தட மென்தோள் என்று சொல்லியதும் சமுதாயத்திற்கு இவர்கள் காட்டிய புதிய வழி. இப்போது சமுதாயம் திரும்பப் பண்ணுகிறது. எப்படி பண்ணுகிறது? திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் போனுல் அவர்கள் பின்னுல் கூட்டம் போயிற்று. இங்கே சிந்திக்கவேண்டும். இவர்கள் சித்து செய்கிருர்கள் - அப்படித் திரும்பினுல் ஒரு ஆப்பிள், இப்படித் திருடபினுல் விபூதி, இந்தக் கையிலே ஒருவேல்—என்பதற்காக அவர்கள் பின்னுல் கூட்டம் போகவில்லை. அதை மறந்துவிடக் கூடாது. அவ்வளவு பயித்தியக்காரன் அல்ல தமிழன். செப்பிடுவித்தைக் காரனுக்கும், இவர்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் இல்லை. 'சூமந்திரக்காளி'என்ருல் மாங்கன்று வருகிறது அவனிடம். இவர்களிடம் விபூதி வருகிறது. இதைப் பெரிதாக மதித்து ஓடும் கூட்டமல்ல பழைய தமிழர் கூட்டம். ஜைனன் சொல்லியிருக்கிருன்' தமிழர்களை 'ஆய்வறிவுவாதி' என்று. பின்னுல் ஓடினுன் என்ருல் பாலைக் குடித்ததனுலேயோ அல்லது முதலையுண்டபாலனை வரவழைத்ததாலோ அல்ல. இவன் பாடுகிருனே, அந்தப் பாட்டைக் கேட்கும்போது இவனுடைய மன ஆழத்தைப் புரிந்துகொள்கிறது சமுதாயம். கூட்டம் போனது அதனுலேதான். இவர்கள் ஏனையோர்போல் உபதேசம் செய்ய வரவில்லை.

(வளரும்)

# நால்வர் தமிழ்

'சித்தாந்த வித்தகர்'

ந. ரா. முருகவேள், M. A. M. O. L.

## இராமலிங்கர்

இராமலிங்க வள்ளலார், சென்னையில் வாழ்ந்திருந்த காலத்தில், கந்த கோட்டத்திற்கு மட்டுமேயன்றி, திருவொற்றியூர்த் தியாகராசப்பெருமான் திருக் கோயிலுக்கும், திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் சென்று வழிபட்டு மகிழும் வழக்கமுடைய வராக இருந்தார். ஒருநாள் தங்க சாலை வழியாகத் திருவொற்றி யூர்க் கோயிலுக்கு, வள்ளற்பெரு மான் விரைந்து நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவருடன் 'உபயகலாநிதிப்பெரும் புலவர்' திரு. தொழுவூர் வேலாயுத முதலியார் போன்ற அன்பர்கள் சிலரும், உடன்சென்று கொண்டிருந்தனர். விரைவாக நடந்து சென்றுகொண்டிருந்த வள்ளற்பெருமான், தங்கசாலைத் தெருவில் ஓரிடத்தில் திடீரென அசைவற்று நின்றார். அவரது கண்கள் மூடியிருந்தன. மூச்சு மெல்லென நிகழ்ந்தது. முகத்தில் மகிழ்ச்சிக்குறி மலர்ந்தது. உடம்பு பரவச நிலையில் இருந்தது. கண்கள் நீர் சொரிந்தன. இங்ஙனம் ஒருசில நிமிடங்கள் அசைவற்று நின்ற வள்ளற்பெருமான். பின்னர் உணர்வுபெற்றுக் கண்விழித்துத் தொடர்ந்து நடக்கத் தொடங் கினார்.

## இராமலிங்கரின் அநுபவம்

சுவாமிகள் திருவொற்றியூர்க் கோயிலுக்குச் செல்லும் வழியில் இங்ஙனம் தம்மை மறந்து பரவசமுற்று நின்றதும், அவர்தம் கண்களில் நீர் சுரந்து சொரிந்த தும் எற்றுக்கு? என்று, அன்பர் களுக்குப் புலனாகவில்லை. ஆயினும் அதுபற்றி அவர்கள் அடிகளாரிடம் அப்போது ஏதும் கேட்க முற்பட்டிலர். சில நாட்கள்கழித்து அடிகளார்பால் இதுபற்றித் தொழுவூர் வேலாயுதமுதலியார், அன்பர்கள் பலரின் தூண்டுதலுக் கும் வேண்டுதலுக்கும் இணங்கி மிகவும் பணிவுடன் வணங்கி வினவினார். அப்போது அவருக்கு வள்ளற்பெருமான் அந்நிகழ்ச்

சியை நினைவுகூர்ந்து, புன்முறுவல் அரும்ப, அதற்குரியகாரணத்தைக் குறிப்பாக மொழிந்தருளினார். வள்ளற்பெருமான் சென்று கொண்டிருந்தபோது, அருகே ஓர் இல்லத்திலிருந்து, யாரோ ஒருவர் இனிய குரலில் தேவாரம் பாடிக் கொண்டிருந்தார். அவ் இனிய தேவார இசைப்பாடல், நம் அடிகளாரின் திருச்செவிகளில் வந்து ஒலித்தது. அத் தேவார இசையினைச் செவிமடுத்த அளவில் அடிகளார் தம்மை மறந்தார். பரவசமுற்றார். அவர்தம் திருக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது என்று அன்பர்கள் உணர்ந்துமகிழ்ந்தனர். இந்நிகழ்ச் சியினைச்சுட்டும்வகையில் திருவருட் பாவில் பின்வரும் சிறந்த பாடல் ஒன் அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

''சேல்வரும் கண்ணிஇடத்தோய்!
நின்
சீர்த்தியைச் சேர்த்தி, அந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப்
புறத்தில் நடக்கச் சற்றே
கால்வரும் ஆயினும், இன்புரு
ஆகிக் கனிமனம், அப்
பால்வருமோ? அதன்பாற்பெண்
களைவிட்டுப் பார்க்கினுமே''

—திருவருள்முறையீடு, 163

பாடலின் பொருள்

''சேல்மீன் போன்ற கண்களை உடைய அம்மையை, இடப்பாகத் திற் கொண்ட சிவபெருமானே! நின்னுடைய ஒப்புயர்வற்றபெரும் புகழ்களையெல்லாம் ஒருங்கே தொகுத்து, உலகமெல்லாம் அறிந்து போற்றுகின்ற பெருமை மிக்க சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நான்கு பெருமக்களும், அருளிச் செய்த தேவார, திருவாசகமாகிய தமிழ் மறைப் பாடல்களைக் கேட்டால் அந்தஇடத்தை விட்டுப்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்லச்சிறி தாவது கால்கள் வருமா? ஒரோ வழி கால்கள் பெயர்ந்து செல்ல முற்பட்டாலும், தேவார திருவா சகத் திருமுறைப் பாடல்களைக் கேட்டுத் தன்வயம் இழந்து, துன் பங்களும் கவலைகளும் நீங்கி, இன்ப மயமாக மாறி, பக்குவப் பட்டு முதிர்ந்து அன்பினூற் கனிந்த மனம், அவ்விடத்தை விட்டுஅப்புறம் பெயர்ந்துசெல்லு மோ? பெண்களை விட்டு மயக்க முடன்று பார்த்தாலும் கூட தேவார திருவாசகப்பாடல்களைக் கேட்டு இன்புற்றுக் கனிந்த மனம் அவ் இடத்தைவிட்டு ஒருபோதும் பெயர்ந்து செல்ல மாட்டாது'' என்பது, இத்திருவருட்பாவின் திரண்ட சிறந்த பொருள் ஆகும்.

சொற்பொருள் நுட்பங்கள்:

இத் திருவருட்பாவினால், நால்வர் பெருமக்கள் அருளிச் செய்ததேவார திருவாசகப் பாடல்களில், நமது வள்ளற் பெருமான் எத்துணை அளவுக்கு

அன்பும் ஆர்வமும் கொண்டு ஈடுபட்டிருந்தார் என்பதும், பிறவும் புலனாகும்.

(1) இதன்கண், சிவபெருமானின் பரந்து விரிந்த பெரும் புகழ்களை யெல்லாம், தேவார திருவாசகப் பாடல்கள் ஒருங்கு தொகுத்து உணர்த்துதல் பற்றி, வள்ளற் பெருமான் ''நின் சீர்த்தியைச் சேர்த்தி'' என்றார்.

(2) 'நால்வர்' என்னும் தொகைக் குறிப்புச் சொல், வேறு எவரையும் குறிக்காமல், சம்பந்தர் அப்பர் சுந்தரர் மணிவாசகர் என்னும் நால்வர் பெருமக்களை மட்டுமே, சிறப்பாகக் குறிக்கும் ஆதலின், அவர்களின் பெயர்களைக் கிளந்து கூறாமல், பொதுவாக 'நால்வர்' என்று மட்டுமே அடிகளார் குறிப்பிட்டார்.

(3) 'நால்வர்' எனின் எந்த நால்வர் என்று எவரும் ஐயுற்று வினவாதபடி, அவர்கள் உலக மறிந்த பெருமையினராதலை உணர்த்த 'அந்த நால்வர்' எனப் பட்டது.

(4) ஒரு சிலர், தமிழ்மொழி என்றும் வளர்ந்து வரும் இயல்புடையதாதலின், ''இக்கால மக்கள் ஒருசிலர் ஏதோ ஒரு வாறு இயற்றிவரும் பாடல்களையும்கூட, நால்வர் பாடல்களுடன் புதிதாகப் புகுத்திச் சேர்த்துத் தொகுத்தால் என்னை?' என்று கருதியும் கூறியும் வருதலை மறுக்கும் வகையில்; அந்த நால்வர்களின் வரிசையில் பிறர் எவரும் ஒருங்கு வைத்து எண்ணத் தக்கவரல்லர் என்பதை உணர்த்துவதற்கு, இனைத்தென அறிந்த கிளவிகளுக்குப் புணர்த்துதற்குரிய முற்றும்மை கொடுத்து ''அந்த நால்வரும்'' என்று வள்ளற் பெருமான் முடிந்தது முடித்தலாக அளந்தறிந்து மொழிந்தருளினார்.

(5) தமிழ் என்றாலே அமையுமாயினும், 'செய்தமிழ்' என்று மேலும் சிறப்பித்தருளியது, இயல்பாகவே இனிமையுடைய தமிழை, நால்வர் பெருமக்கள் மேலும் இனிமையும் சிறப்பும் தெய்விகமும் உடையதாகச் செய்தருளியமை பற்றி.

(6) 'கேட்டு' என்னும் சொல் 'கேட்டால்' என்னும் பொருள் உணர்த்தி வந்தது. 'கேட்டும்' என்று உம்மை விரிப்பினும் அமையும். 'கால் வருமாயினும்' என்பதில் உள்ள எதிர்மறை உம்மை, கால்கள் வரமாட்டா என்னும் குறிப்புணர்த்தி நின்றது; மற்றும் இதன்கண் 'கால் வருமோ?' என்னும் வினாத் தொடர் தொக்கு நின்றது. புறத்தில் நடக்கச் சற்றே கால் வராமைக்குக் காரணம், இன்புருவாதல் என்பது சுட்டப்பெற்றது.

(7) இன்ப உரு அடைதலில் மேலும் வேறொரு விழுமிய பயன்கூறுவார், மனத்தினைக் 'கனிமனம்' என்றார். ''செழுக் கமலத் திரள்அன நின்சேவடி சேர்ந்து அமைந்த பழுத்த மனத்து அடியார்'' என்றும்; ''வாழைப் பழத்தின் மனம் கனிவித்து'' என்றும் வரும் திருவாசக வரிகள் இங்கு நினைந்து இன்புறற்பாலன. தேவார திருவாசகத் திருமுறைப் பாடல்களைக் கேட்டால், கருங் கல்மனமும் கனிந்துருகப்பெறும் என்பது கருத்து.

(8) சிறந்துயர்ந்த தவமுனிவர் களும் அரம்பை ஊர்வசி மேனகை திலோத்தமை என்னும் தேவருலகப் பெண்களால் மயக்கப்பெற்று மனம் திரிந்து தம் தவத்தைக் கைவிட்டமை யினை, நாம் நம் புராண நூல்கள் புகலக் காண்கின்றோம். ஆதலால் தேவார திருவாசகத் திருப்பாடல்களின் தெய்விக இசையைக் கேட்டு, அதன் வயப் பட்ட உண்மை அடியவர்களின் உள்ளம், அத்தகைய பெண்களுக் கும் கூட மயங்கமாட்டாது என்பது, இப்பாடலில் வள்ளற் பெருமானால் தெள்ளத் தெளியக் கூறப்பட்டுள்ள திறம், வியந்து போற்றி மகிழற்பாலது.

முடிவுரை : இதனால் நால்வர் தமிழின் நலங்களும், அதன்பால் அளவிலா அன்பும் ஆர்வமும் கொண்டிருந்த இராமலிங்க அடிகளாரின் ஈடு இணையற்ற எல்லையிலாப் பத்திமையும், செவ்விதின் விளங்குகின்றன.

## ஆலய பூஜை படிக்காசு நிதி

### நன்கொடையளித்த அன்பர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| | 1—3—83 வரை கூடுதல் | ரூ. 14,977-50 |
| 1. | திரு S. முத்தையா, மயிலாடி. | ரூ. 7-50 |
| 2. | திரு V. K. மெவுந்தராஜ பிள்ளை, குடந்தை | ரூ. 5-00 |
| 3. | திருT. M. வெள்ளைவாரணம். பனசை | ரூ. 10-00 |
| 4. | திருM. சக்திவேல், சென்னை. | ரூ. 7-50 |
| 5. | திரு சு. சந்தானம், மன்னார்குடி. | ரூ. 3-00 |
| 6. | திரு. அப்பு, துர்க்கா குடில், குடந்தை. | ரூ. 5-00 |
| 7. | திரு ப. சிவராமகிருஷ்ணன் M. A, M. Ed. மயிலாடுதுறை. | ரூ. 10-00 |
| | 5—4—83 வரை கூடுதல் | ரூ. 15,025 50 |

உ

சிவ சிவ

## மதுரையில்

# திருவிளையாடற் புராணப் பிரசங்க நிதி

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் கயிலைமாமுனிவர்

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

அருளாணையின் வண்ணம் நடத்தப்பெறுவது

துந்துபி ஆண்டு பங்குனிமீ 30 - ம் தேதி முதல்
ருதிரோத்காரி ஆண்டு சித்திரைமீ 23 - ம் தேதி முடிய
(1—4—83 முதல் 6—5—83 முடிய)

இடம் :—

**தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம்**
**39, வடக்கு மாசிவீதி, மதுரை.**

சொற்பொழிவாளர்:

சொல்லோவியர், திரு. சொ. சொ. மீ. சுந்தரம் M. Com.
அவர்கள்,

13—4—83 முதல் 20—4—83 வரை
திருவிளையாடற் புராணம் — **மதுரைக் காண்டம்** பற்றியும்,
21—4—83 முதல் 28—4—83 வரை
திருவிளையாடற் புராணம் — **கூடல் காண்டம்** பற்றியும்,
29—4—83 முதல் 5—5—83 வரை
திருவிளையாடற் புராணம்
—**திருவாலவாய்க் காண்டம்** பற்றியும்

நாடோறும் மாலை 7-மணி முதல் 9-மணி வரை
விரிவுரை நிகழ்த்துவர்.

திருப்பனந்தாள்,
1—4—83

ஆணைப்படி,
முத்து. மெய்கண்டதேவன்,
மானேசர், ஸ்ரீ காசிமடம்.

# திருமூலர் திருமந்திரம்

சொ. சொ. மீ. சுந்தரம் M. Com.

## திருமூலர் பெருமை

ஒரு காட்டில் ஐந்து யானைகள் வாழ்கின்றன. மனிதன் இவற்றோடு வாழ்ந்து இவற்றை அடக்க வேண்டும். இல்லையேல் இவை மனிதனை அடக்கிவிடும். ஒரு யானையை அடக்கும் மாவுத்தன் ஓர் அங்குசத்தைப் பயன்படுத்துகிறான். ஐந்து யானைகளை அடக்க ஐந்து அங்குசங்கள் வேண்டும். ஐந்து அங்குசங்களையும் ஒரே மனிதன் பயன்படுத்த வேண்டும். இது முடியுமா? முடியும். இந்த யானைகள் நம் உடம்பில் இருக்கும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாகும். இவற்றை அடக்கும் அங்குசம் திருவைந்தெழுத்தாகும்.

அஞ்சுள வானை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன.

என்பது திருமூலர் பாடிய திருமந்திரப் பாடல் (எண் 977). ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று பலரும் பேசக் கேட்கிறோம். இந்தத் தொடருக்கும் கருத்துக்கும் உரியவர் திருமூலர். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்பது திருமூலர் திருவாக்கு. பலகாலம் தவம் இருந்து தெரிந்துகொள்ள வேண்டிய கருத்துக்களை, உலகமக்கள் நலனுக்காகத் தொகுத்துத் தந்தவர் திருமூலர். ''எல்லாப் பொருளும் இதன்பால் உள'' என்று கூறுமாறு மூவாயிரம் பாடல்களில் சைவ சித்தாந்தத்தை விளக்கிய பெருமை திருமூலருக்குரியது.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

என்பது ஔவையார் பாடிய அருந்தமிழ்ப் பாடல்.

## திருமந்திரச் சிறப்பு

ஆன்மாக்களின் பசு ஞானத்தை மாற்றிப் பதிஞானம் தந்து இறைவன் திருவடியின்பம் நல்கும் தலம் திருவாவடுதுறை. ஆ என்றால் பசு. அடுதல் என்றால் அற்றுப் போதல். துறை தெரியாமல் தவிக்கும் மக்களைக் கரையேற்ற நால்வர் பெருமக்கள் நான்கு துறைகளை நமக்குத் தந்தார்கள். வேதநெறியில் வந்த மிகு சைவத் துறைகளில் திருஞானசம்பந்தப் பெருமான் தோணித் துறையையும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர்த் துறையையும் மணிவாசகர் திருப்பெருந் துறையையும் காட்டியருளினர். திருநாவுக்கரசர் பெருமான் துறை மாறிப் போய்ச் சமணத்தில் சேர்ந்தாலும், தேவாரம் பாடச் செழுந்தவம் புரிந்ததால், திருவையாற்றுத் துறையிலே சிவனருள் பெற்றார். இதுபோலவே, தோத்திரம் பாடிய நால்வர் வழியில், இவர்கள் காலத்துக்கு முன்பே சிந்தித்துத் தோத்திரமும் சாத்திரமும் பாடிய திருமூலர் திருவாவடுதுறையில் இருந்து ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் பாடிய மூவாயிரம் பாடல்களே திருமந்திர நூலாக வந்தன.

சைவத் திருமுறைகள் பனிரெண்டில் பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமந்திரம். பிரம மந்திரம் 5, அங்கமந்திரம் 6, மூல மந்திரம் 1 ஆக மொத்தம் பனிரெண்டு, மந்திரங்களின் வடிவமே பன்னிரு திருமுறைகள் என்பர் அறிஞர். இதன்படி பத்தாவது மந்திரமான நேத்திர மந்திர வடிவம் திருமந்திரம். மந்திர வடிவமாவன திருமுறைகளில் மந்திரம் என்ற பெயரையே பெற்றது திருமந்திரம். மற்ற திருமுறைகளையும் அவற்றின் மூலம் சிவபரம் பொருளையும் காட்டும் கண்ணாக விளங்கும் திருமந்திரம், நேத்திர மந்திர வடிவம் என்பது பொருத்தமன்றோ! ''ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை'' என்று இந்நூலைச் சேக்கிழார் சுவாமிகள் பாராட்டுகிறார்.

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம்- அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்.

என்ற தனிப்பாடலும்,

திருமூலர் மாலையெனும் தெப்பத்தைப் பற்றிக்
கருவேலை யைக்கடப்போம் காண்.

என்ற சித்தாந்த தரிசனமும் இந்நூலின் சிறப்பை விளக்குகின்றன.

நாம்எல்லாம் மாந்தர்கள். மாந்துதல் என்றால் உட்கொள்ளுதல். ஐம்புலனால் மாந்துவது அனைத்துயிர்க்கும் பொதுவாகும். ஆண்டவனைச் செம்புலனால் மாந்துவது சிறப்பாகும். நம்மைச் சிவனருளுக்கு ஆளாக்கி மாந்துவிப்பவர் குருநாதர். அவரை நிறைமொழி மாந்தர் என்கிறோம். அவருடைய ஆணையினால் எழுந்த மறை மொழியே மந்திரமாகும். திருமூலர் தெய்வப் பேரருளை நமக்கு மாந்துவித்தவர். அவர் தந்த மறைமொழி திருமந்திரம். இந்த நூலுக்குத் திருமந்திரம் என்றும் மந்திரமாலை என்றும் இரண்டு பெயர்கள் உண்டு. இப் பெயர்கள் இரண்டிலும் ஒற்றுநீக்கி எண்ணினால் ஐந்தெழுத்துக்கள் வரக் காணலாம். அனைவருக்கும் உரிய அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துத் தானே!

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் குறிப்பது போலத் திருமந்திரப் பாடல்கள் ஒவ்வொன்றும் நான்கு சீர்கள் உடையவை, வெண்டளை தவறாத யாப்பைப் பெற்றவை. ஒவ்வொரு வரியிலும் ஒற்றெழுத்துக்களை நீக்கிப் பார்த்தால் பனிரெண்டு எழுத்துக்கள் வரக்காணலாம். திருமுறைகளைப் பாடத் தொடங்கும் போதும் நிறைவு செய்யும் போதும் திருச்சிற்றம்பலம் என்று கூறித் தொடங்குவதும் நிறைவுசெய்வதும் மரபாகும். இரண்டுமுறை இவ்வாறு கூறினால் வரக்கூடிய மொத்த எழுத்துக்கள் பனிரெண்டாகும். சைவத் திருமுறைகளும் பனிரெண்டாகும். காலக் கணக்கில் ஆண்டுக்குப் பனிரெண்டு மாதங்கள் என்றும் ஒவ்வொரு நாளிலும் பகல் பனிரெண்டு மணிநேரம் இரவு பனிரெண்டு மணி நேரம் என்றும் அமைத்திருக்கிறோம். திருமந்திரப் பாடல்கள் பெரும் பகுதி பனிரெண்டு எழுத்துக் கட்டளை பெற்றவையாகும்.

## திருமூலர் வரலாறு

பன்னாளும் பயில்யோக பரம்பரையில் வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கில் ''நம்பிரான் திருமூலன்'' என்று போற்றப் பெற்றவர் திருமூல நாயனார். புளிக்கண்டவர்க்குப் புனலூறுமா போல் களிக்கும் திருக்கூத்துக் கண்டவர் திருமூலர். இவர் இயற் பெயர் சுந்தரன் என்பது.

தந்திரம் என்பது சார்வுமூ வாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன்மொழி தானே.

என்ற திருமந்திரம் இதைக் காட்டுகிறது;

'நந்தி அருளாலே நாதனும் பேர் பெற்றோம்' என்ற பாடல், நந்தியெம்பெருமான் தந்த சிறப்புப்பெயர் சுந்தரநாதன் என்பதைக் காட்டுகிறது. சுந்தரநாதர் நந்தியெம்பெருமான் மாணாக்கரில் ஒருவர். நந்திகள் [சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற] நால்வர், சிவயோக மாமுனிவர், மன்றுதொழுத பதஞ்சலியார், வியாக்ர பாதர் என்ற எழுவரும் திருமூலராக வரவுள்ள சுந்தரநாதரும், ''நங்குல பரம்பரைக்கெல்லாம் முதற்குரு நாதனாகிய'' நந்தியெம் பெருமானிடம் கல்வி கற்றனர். பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் தில்லையில் ஆடும் கூத்தப்பெருமான் ஆனந்தக் கூத்தைக் காணப் புறப்பட்டபோது, சுந்தர நாதரும் உடன் சென்றார். தில்லை வெளியில் கலந்து விட்ட பதஞ்சலியும் வியாக்கிர பாதரும் திரும்பாமல் அங்கேயே இருக்க, சுந்தர நாதர் மட்டும் திரும்பி வந்தார். அணிமாதி சித்திகளும் சிவயோகமும் கைவரப் பெற்ற சுந்தரநாதர் தன் நண்பராகிய அகத்தியரைக் காண விழைந்து மீண்டும் கயிலையிருந்து புறப்பட்டார். பொதியமலையை நோக்கி வரும் வழியில் மன்னு திருக்கேதாரம் வழிபட்டு, நேபாளத்தை வணங்கிக் கங்கை நீராடி, காசியைப் பணிந்து, விந்தமலை, சீசைலம் ஆகிய மலைகளை இறைஞ்சிக் காளத்தி, திருவாலங்காடு காஞ்சிபுரம் ஆகிய தலங்களைத் தொழுது சிதம்பரத்தை அடைந்தார். திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடனம் செய்யும் ஆனந்தக் கூத்தனை வணங்கினார். அங்கே சிலகாலம் இருந்து, காவிரிக் கரையைக் கடந்து, திருவாவடுதுறையை அடைந்தார். பசுவின் வடிவெடுத்து, உமையம்மையார் பரமனை வழிபட்ட தலம் திருவாவடுதுறை. பசுத்தன்மை நீங்கப் பெறும் இடமாதலின் இதனைக் கோகழி என்பதும் உண்டு. அங்கே வழிபட்ட சிவயோகியாருக்கு, திருவருட் குறிப்பினால் அங்கேயே இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆயினும் அந்த இடத்தை விட்டு அகன்று செல்ல எண்ணிக் காவிரிக் கரையை யொட்டி வந்த யோகியார், அங்கே பசுக்கள் துன்புற்றுப் புலம்புவதைக் கண்டார். அவற்றை மேய்த்து வந்த மூலன் என்ற இடையன் இறந்து கிடக்க, அவன் உடம்பைச் சுற்றிப் பசுக்கள் அழுது நிற்கக் கண்ட யோகியார், அவற்றின் துன்பத்தை நீக்க எண்ணினார். அட்டமாசித்திகளில் வல்ல சிவயோகியார் தம் உடம்பைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டுப் பரகாயப் பிரவேசத்தின்மூலம் தம் உயிரை மூலன் உடம்பில் புகச் செய்தார். உடனே மூலன் யோகியார் உயிரால் இயக்கப்பெற்ற உடம்போடு திருமூலராக எழுந்தான். இதைக்கண்ட பசுக்கள் மகிழ்ந்தன. திருமூலர் அவற்றைக் காத்துச் செலுத்த அவை வீடுகளுக்குச் சென்றன. அவர் ஊர்

எல்லையில் நின்றார். மனைவி வந்து மெய்தீண்ட இவர் உனக்கும் எனக்கும் தொடர்பில்லை என்றார். அந்த ஊர்ப் பெருமக்கள் மறுநாள் வந்து அவர் நிலையைக் கண்டனர். "பித்தும் அல்ல; பிற சார்புகளும் அல்ல, இது சிவயோகம்" என்று உணர்ந்தனர். பற்றற்றவராகிப் பரமார்ப்தம் பெற்றிருக்கும் இவர் இனி இல்வாழ்க்கை இயல்புக்கு உடன்பட மாட்டார் என்று அறிந்ததால், மூலன் மனைவியை அழைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினர்.

இவ்வளவும் நடந்தபின் தானிருந்த இடத்தைவிட்டு, ஆற்றங்கரைக்கு வந்த யோகியார், தாம் காவல்செய்து வைத்த உடம்பைத் தேடினார், காணப்படவில்லை. சிவபெருமான் விரித்துரைத்த ஆகமப் பொருளைத் திருமூலராக இருந்து தமிழில் தர வேண்டும் என்பதற்காகவே சிவபிரான் தம் உடம்பை மறைத்தருளினன் என்று உணர்ந்து கொண்டார்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே.

என்ற எண்ணம் எழுந்தது. திருவாவடுதுறையில் இருக்க எண்ணிய மனமும் எண்ணத்தைச் செயல் படுத்த இறைவன் அருள் புரிந்தான். சிவயோகியின் ஆன்மா, மூலன் உடம்பில் புகுந்து, திருவாவடு துறையில், திருக்கோயில் சுற்றின் மேற்குப் பக்கத்திலே உள்ள அரச மரத்தின் கீழமர்ந்து, "சிவயோகம் தலைநின்றார்" என்றுசேக்கிழார் பாடும் சிறப்பைப் பெற்றது, சிவாகமப் பொருளை விளக்கி ஆண்டுக்கொரு பாவாகத் திருமந்திரமாலையைப் பாடினார் திருமூலர். பசுக்களின் பிறவித் துயர் நீங்கப் பாடுபட்டது. சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கும் முறையே அரும்பு, மலர், காய், கனிகளாக அமைந்தன. அவற்றை விளக்கும் திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாக மலர்ந்து, காரண ஆகமம், காமிக ஆகமம், வீர ஆகமம், சிந்தாகமம், வாதுள ஆகமம், வியாமள ஆகமம் காலோத்தர ஆகமம், சுப்பிர ஆகமம், மகுட ஆகமம் ஆகிய ஆகமங்களின் தமிழ் வடிவமாயிற்று.

சுந்தரநாதராக இருந்த திருமூலர் முப்பது உபதேசம், முன்னூறு மந்திரம், மூவாயிரம் தமிழ் என்ற மூன்று நூற்களைப் பாடினார் என்றும் இவற்றுள் மூவாயிரம் தமிழ் மட்டும் மூலன் உடம்பில் புகுந்தபின் பாடப்பட்டதென்றும் மற்றவையிரண்டும் யோகியார் உடம்போடு இருந்த நாளில் பாடப்பெற்றன வென்றும் கூறுவார்

உண்டு. ஆனால் மூவாயிரம் தமிழ் எனச் சொல்லப்படும் திருமந்திரத்திலேயே முதல் தந்திரத்தில் உபதேசம் என்ற தலைப்பில் முப்பது பாடல்கள் காணப்படுகின்றன. இதுபோலவே முன்னூறு மந்திரம் என்பதும் திருமந்திரத்தின் வேறு பகுதியாக இருக்கலாம்.

மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்
மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே.

என்ற பாடல் இம்மூன்றும் ஒரே கருத்தை உடையன என்று கூறுவதால் திருமந்திரம் மூவாயிரத்துள் மற்றவையும் அடங்கும் என்பது தெரிகிறது.

திருமுறைகளில் காலத்தால் முற்பட்டது திருமந்திரம். கலியுகத்தின் தொடக்கத்தில் சொல்லப்பட்ட இந்நூல் மூலநூலாக எழுந்த முழுத்தமிழ் நூலாகும்.

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழ்இருந் தங்கு அறமுரைத்தான் காணேடீ.

என்று மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளினார். ஆலின் கீழ் அமர்ந்து ஆண்டவன் அருளிய அறங்களை, அரசின் கீழ் அமர்ந்து உலகமுய்ய எடுத்துரைத்தவர் திருமூலர். அரனடி நாடோறும் சிந்தை செய்து ஆகமம் செப்பியவர்.

கயிலாயத் தொருசித்தர் பொதியில் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருதும் மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயரம் நீடும்
பசுக்களைக்கண் டவனுடலில் பாய்ந்து போத
வயலாகப் பண்டையுடல் அருளால் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரும் அரசடியில் இருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகி னாரே.

என்று திருத்தொண்டர்புராண சாரப் பாடல் குறிப்பிட்டபடி, மூலன் உடம்பு பெருந்தவம் செய்து சிவயோகியின் ஆன்மாவைத் தாங்கிநின்று ஆண்டுக்கொரு பாடலாக அறம் உரைத்தது. இந்தத் திருமூலர் திருமரபில் வந்தவரே தாயுமானார்.

மந்த்ரகுரு வே!யோக தந்த்ரகுரு வே! மூலன்
மரபில்வரு மௌன குருவே.

என்று குருவணக்கம் பாடிய தாயுமானுர், மூலரைப் போற்றினுர். இத்திருமந்திரத்தின் பலன் கூறிய திருமூலர் இதைக் காலையில் எழுந்து கருத்துடன் ஓதினுல் இறைவனை அடைவதும் எளியதாம் என்றுர்.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.

என்பது திருமந்திரம். தனக்குச் சிவபெருமான் மானிடச் சட்டை தந்தது அந்தப் பெருமானை நன்ருகத் தமிழ் செய்யுமாறே என்று உணர்ந்தார் திருமூலர் தமக்குச் சிவபெருமான் மானிடச் சட்டை தந்தது இத்தகைய அருளமுதத்தைப் பருகி உணர்ந்து பேரின்பம் அடையவே என்று நாம் உணர்கிறோம். இனி, இம்மந்திரப் பாடல்களை ஒவ்வொரு பாடலாக உணர்ந்து, குருவருளும் திருவருளும் பெறுவோமாக!

(வளரும்)


Phone No: 222 Tel. Add. "JEWELLERY"
T. N. G. S. T. No. 209126. Post Box No. 14
L. No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு
நடராஜ விலாஸ்
ஜுவல்லரி ஹால்
சிதம்பரம்

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்,
உரிமையாளர்கள்:
நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்.
தென்னுர்க்காடு மாவட்டம் — 608 001.

# திருக்கணித பஞ்சாங்கம்

தி. கி. நாராயணசாமி, கடலூர்-1

ருத்ரோத்காரி-சித்திரைமீ (1983 - ஏப்ரல்மீ - மேமீ)

திதி, நட்சத்திர காலம், முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

| தமிழ்வ | ஆங்கிலப்வ | கிழமை | திதி | | நட்சத்திரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | (14—4—83) | வியாழன் | பிரதமை | 12-53 | அசுவனி | 14-56 |
| 2 | (15—4—83) | வெள்ளி | துவிதியை | 11-55 | பரணி | 14-40 |
| 3 | (16—4—83) | சனி | திரிதியை | 10-38 | கார்த்திகை | 14-04 |
| 4 | (17—4—83) | ஞாயிறு | சதுர்த்தி | 9-06 | ரோகிணி | 13-14 |
| 5 | (18—4—83) | திங்கள் | பஞ்சமி<br>சஷ்டி | 7-23<br>29-31 | மிருகசிரிஷம் | 12-13 |
| 6 | (19—4—83) | செவ்வாய் | சப்தமி | 27-30 | திருஆதிரை | 11-03 |
| 7 | (20—4—83) | புதன் | அஷ்டமி | 25-23 | புனர்பூசம் | 9-45 |
| 8 | (21—4—83) | வியாழன் | நவமி | 23-11 | பூசம் | 8-22 |
| 9 | (22—4—83) | வெள்ளி | தசமி | 20-58 | ஆயில்யம்<br>மகம் | 6-55<br>29-26 |
| 10 | (23—4—83) | சனி | ஏகாதசி | 18-45 | பூரம் | 28-01 |
| 11 | (24—4—83) | ஞாயிறு | துவாதசி | 16-39 | உத்திரம் | 26-45 |
| 12 | (25—4—83) | திங்கள் | திரயோதசி | 14-45 | அஸ்தம் | 25-44 |
| 13 | (26—4—83) | செவ்வாய் | சதுர்த்தசி | 13-10 | சித்திரை | 25-05 |
| 14 | (27—4—83) | புதன் | ○பௌர்ணமி | 12-00 | சுவாதி | 24-54 |
| 15 | (28—4—83) | வியாழன் | பிரதமை | 11-23 | விசாகம் | 25-18 |
| 16 | (29 4—83) | வெள்ளி | துவிதியை | 11-23 | அனுஷம் | 26-21 |
| 17 | (30—4—83) | சனி | திரிதியை | 12-02 | கேட்டை | 28-01 |
| 18 | ( 1—5—83) | ஞாயிறு | சதுர்த்தி | 13-20 | மூலம் நாள்முழுவதும் | |
| 19 | ( 2—5—83) | திங்கள் | பஞ்சமி | 15-12 | மூலம் | 6-17 |
| 20 | ( 3—5—83) | செவ்வாய் | சஷ்டி | 17-29 | பூராடம் | 9-00 |
| 21 | ( 4—5—83) | புதன் | சப்தமி | 19-58 | உத்திராடம் | 11-59 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | (5—9—83) | வியாழன் | அஷ்டமி | 22-24 | திருஓணம் | 15-00 |
| 23 | (6—5—83) | வெள்ளி | நவமி | 24-33 | அவிட்டம் | 17-48 |
| 24 | (7—5—83) | சனி | தசமி | 26-13 | சதயம் | 20-10 |
| 25 | (8—5—83) | ஞாயிறு | ஏகாதசி | 27-15 | பூரட்டாதி | 21-58 |
| 26 ஏ | (9—5—83) | திங்கள் | துவாதசி | 27-36 | உத்திரட்டாதி | 23-06 |
| 27ஆ | (10—5—83) | செவ்வாய் | திரயோதசி | 27-17 | ரேவதி | 23-36 |
| 28 | (11—5—83) | புதன் | சதுர்த்தசி | 26-21 | அசுவனி | 23-28 |
| 29 | (12—5—83) | வியாழன் ● | அமாவாசை | 24-54 | பரணி | 22-49 |
| 30 | (13—5—83) | வெள்ளி | பிரதமை | 23-03 | கார்த்திகை | 21-44 |
| 31 | (14—5—83) | சனி | துவிதியை | 20-53 | ரோகிணி | 20-21 |

**1983-ல் கிரகங்களின் நிலை (நடை)கள்.**

செவ்வாய்: 1983 - ல் மகரம் முதல் துலாம் வரை 10 ராசிகளில் வருகிறது. ஏப்ரல் 28 முதல் ஜூலை 25 வரை சூரியனோடு மறைவு. ஜுன் 3-ல் சூரியனுடன் ஒரே பாகை (டிக்ரி) யில் வரும். குருவிற்கு 90° டிகிரியில் (சதுர நிலையில்) சனவரி 24, அக்டோபர் 24 லில் வருகிறார். சனிக்கு 90 பாகையில் ஆகஸ்டு 12ல் வருகிறார். குரு டிசம்பர் 22ல் விருச்சிகத்தை விட்டு தனுசுக்கு வருகிறார். டிசம்பர் 2 முதல் 26 வரை சூரியனில் மறைவு. டிசம்பர் 14ல்சூரியனுடன் ஒரே டிகிரியில் மார்ச் 28உ முதல் ஜூலை 29உ வரை வக்ரம் அடைகிறார். மார்ச்1, ஆகஸ்டு26, சூரியனுக்கு 90 டிகிரியில் வருகிறார். சூரியனுக்கு நேர் எதிரில் மே 28ல் வருகிறார். சனி இந்த ஆண்டு துலாத்திலேயே இருக்கிறார். அக்டோபர் 14, முதல் நவம்பர் 13 வரை சூரியனில். அக்டோபர் பிப்ரவரி 12முதல் ஜூலை1 வரை வக்ரம் சூரியனுக்கு எதிரில் ஏப்ரல் 21 31லும் சூரியனில் மறைவு. சதுர நிலை சனவரி 21ல் ஜூலை 21லும் வருகிறார்.



## அருள்மிகு சபாநாயகர் (ஸ்ரீமந் நடராஜர்) கோயில் திருப்பணி கமிட்டி, சிதம்பரம்.

### வேண்டுகோள்

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், சிதம்பரம் நகர், அருள்மிகு சபாநாயகர் (ஸ்ரீ நடராஜா) கோயில் பல்வேறு திருப்பணி மற்றும் கட்டுமான வேலைகளுக்குப் பொது தீட்சதர்களின் மகாசபையின் தீர்மானப்படி ரூ. 39, 45, 690/- மதிப்பீட்டின் பேரில், கிழக்கு, வடக்கு, தெற்கு, மேற்கு ராஜ கோபுரங்கள், ஆயிரங்கால் மண்டபம், வெளி திருமதில், உள்திருமதில், அம்மன் கோயில், திருமாளிகைப் பத்திமண்டபம், நூற்றுக்கால் மண்டபம், தேர் மண்டபம், வடக்கு, கிழக்கு மணி மண்டபம், வடிகால் அமைத்தல், மின் இணைப்பு முதலிய பல்வேறு திருப்பணிகள் நடத்துவதற்கு இந்து அறநிலைய ஆட்சித்துறை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அரசுமான்யமாக இதுவரையில் ரூ. 9, 50, 000/-ம், ஆணையர் பொதுநல நிதியிலிருந்து ரூ. 20, 000/-ம் அபிஷியல் டிரஸ்டிலிருந்து ரூ. 15, 000-ம் பிற ஆலய உதவி நிதி ரூ. 4, 75, 000/-ம், பொதுமக்கள் நன்கொடை ரூபாய்.14, 73, 694-03ம் பெற்று. இதுவரையில் ரூ. 28, 66, 977-12 செலவு செய்து கிழக்கு, வடக்கு, தெற்கு, மேற்கு இராஜகோபுரங்கள் திருப்பணி, வடிகால் திட்டம், அம்மன் கோயில் திருமாளிகைப் பத்தி. நடவானப்பந்தல், தளவரிசை, கொடிமண்டபம் கட்டுதல் முதலிய பல்வேறு திருப்பணி வேலைகள் திருப்பணி கமிட்டி மூலமாகவும், மற்றும் ஆலய மேல் தளவரிசை ஆயிரங்கால் மண்டபம் கிராதி அமைத்தல் வேலைகள் ஆடூர் ரத்தினசபாபதி பிள்ளை டிரஸ்டு மூலமாகவும், நடவானப் பந்தல் அமைத்தல். திரு. வலிவலம் தேசிகர் அவர்கள் மூலமாகவும், முகப்பு மண்டபம் சிவகாமி மகளிர் மன்றத்தாலும், திருமூலநாதர், அம்மன் கோயில் உதவு சுவர், துர்க்கை அம்மன், அகிலாண்டேஸ்வரி கோயில் திருப்பணி, மதுரை கருமுத்து சொக்கலிங்கம் செட்டியார் அவர்களாலும், முக்குருணி விநாயகர் கோயில் திருப்பணி திரு. பொன்னம்பலம் பிள்ளை அவர்களாலும், மீனாட்சி

சுந்தரேஸ்வரர் கோயில் திருப்பணி திரு. சுப்பராய பிள்ளை அவர்களாலும், திருமூல விநாயகர் திருப்பணி தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர்களாலும் திருப்பணி செய்து முடிவடைந்துள்ளன. பாண்டிய நாயகம் சன்னதி, நவலிங்க சன்னதி திருப்பணி திரு. பாலசுப்ரமணிய செட்டியாரும் அவர்கள் சகோதரர்களாலும், நால்வர் சன்னதி தருமபுர மகாசன்னிதானம் அவர்களாலும், ஆயிரங்கால் மண்டபத் திருப்பணி ஆடூர் ரத்தினசபாபதி பிள்ளை டிரஸ்டாலும் நடந்து வருகின்றன.

மேலும், வெளி திருமதில், உள் திருமதில், நூற்றுக்கால் மண்டபம், சிவகங்கை சுற்றுப்புற கோயில்கள், மூன்று பக்கங்களிலும் கிராதிகள் அமைத்தல் பேரம்பலம், நிர்த்தன சபை, தேர் பாதுகாப்பு, கிழக்கு, வடக்கு மணிமண்டபம், மடைப்பள்ளி, பிரகாரம் தளவரிசை, மின் இணைப்பு பொருத்தல் முதலிய பல திருப்பணிகளைத் தொடர்ந்து நடத்த நிதி தேவைப்படுகிறது.

1975ம் ஆண்டில் திருப்பணி வேலைகள் ஆரம்பித்து சென்ற ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வருகின்றன. திருப்பணி வேலைகளை 1984ம் ஆண்டுக்குள் முடித்து மகா கும்பாபிஷேகம் நடக்க இருக்கிறபடியால் அன்பர்கள் அனைவரும் மனமுவந்து தங்களால் இயன்ற பொருளுதவி கொடுத்து ஸ்ரீமந் நடராஜமூர்த்தியின் திரு அருளைப் பெற வேண்டிக் கொள்கிறோம்.

இக்கோயிலுக்குச் செலுத்தப்படும் நன்கொடைக்கு வருமான வரியிலிருந்து இந்திய அரசாங்கத்தாரால் விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:–

1) திரு. ஜி. வாகீசம் பிள்ளை,
செயலாளர்,
அருள்மிகு சபாநாயகர்,
(ஸ்ரீநடராஜா)
கோயில் திருப்பணி கமிட்டி,
99, கனகசபை நகர்,
சிதம்பரம் - 608 001.

2) திரு. ஆர். பாலசுப்ரமணிய செட்டியார்,
பொருளாளர்,
அருள்மிகு சபாநாயகர்
(ஸ்ரீநடராஜா)
கோயில் திருப்பணி கமிட்டி,
ஸ்ரீநடராஜா ஜுவல்லரி மார்ட்,
கடைத்தெரு, சிதம்பரம்-600108

# தமிழ்நாடு சைவவேளாளர் சங்கம்

## சிதம்பரம் கிளை

சிதம்பரம் சைவ வேளாளர் சங்கத்தின் முதலாம் ஆண்டுவிழா அண்மையில் சைவத்திரு. V. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு M. S. கோவிந்தசாமி சிதம்பரம் தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செயலர் T. R. தியாகராாசன் ஆண்டறிக்கையை யும் நிதியறிக்கையையும் படித்தார். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் வாழ்த்துரை படிக்கப்பட்டது.

தலைவர் திரு. V. குஞ்சித பாதம் பிள்ளை அவர்கள் பேசுகையில் ஆண்டு விழா என்பது தொழில் துறையில் உள்ளவர்கள் ஐந்தொகை கணக்குப் பார்ப்பது போன்று - நமது சங்கம் ஓர் ஆண்டில் ஆற்றிய பணி என்ன- ஆற்ற வேண்டிய பணிகள் யாவை என்பதைப் பற்றி முடிவு செய்வது என்று கூறினார்.

திரு. பாலசுப்பிரமணியன் (தமிழாசிரியர் குறிஞ்சிப்பாடி) அவர்கள் சைவமும்-சமுதாயமும் என்ற தலைப்பில் அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார். சிவத்தோடு தொடர்புடையது சைவம் என்பதையும் சிவன் ஒருவனே தெய்வம் என்பதையும், ஒன்றே குலமும் ஒருவனே தேவன் என்பதையும் - சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் எளிய முறையில் எடுத்துக் கூறினார். உணவில் மட்டுமின்றி ஒழுக்கம்-பண்பாடு-கலாச்சாரம் போன்றவற்றில் பாரம்பரியமாக முறையாக வாழ்ந்து வருபவர்கள் சைவ வேளாளர்கள். இன்றைய சூழ்நிலையில் சமயம்-கல்வி-தொழில்-வாணிபம் மற்றும் பிறவற்றிலும் நம் இனத்தவர்கள் பின்தங்கிய நிலையில் உள்ளனர். அவர்களை இன வழியில் ஒன்று சேர்த்து உதவி செய்யத் தொண்டாற்றும் இச்சங்கத்தின் பொறுப்பாளர்களைப் பாராட்டுகின்றேன் என்று கூறினார்.

மாநிலத் தலைவர் திரு. N. காங்கேயன் பிள்ளை அவர்கள் பேசியது: 'நமது சங்கம் தொடங்கி ஒரு ஆண்டு ஆகிவிட்டது. என்ன செய்துள்ளது என்று பலர் கேட்கின்றனர். தமிழகமெங்கும் பரவி

புள்ள சைவ வேளாளர்களை ஒன்றுசேர்த்து ஆங்காங்கே கிளைச் சங்கங்கள் பல துவக்கியுள்ளது ஓர் ஆண்டின் வெற்றியாகும்.

தலைநகர் (சென்னை) முதல் கன்னியாகுமரி வரை சென்று பார்த்தபோது அனுபவ ரீதியில் கண்ட சிலவற்றைக் கூறவேண்டியுள்ளது. சுமார் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் சமயத்திற்காக இச்சங்கம் ஓரளவு தொண்டு செய்து வருகின்றது என்பதை வரவேற்கின்றனர். 30க்கும் 50க்கும் இடைப்பட்டவர்கள் சங்கத்தால் குடும்ப வாழ்விற்கு என்ன பயன் என்பதை சிந்திக்கும் போது திருமணத்திற்கு உள்ள பெண்கள் பையன்கள் உள்ளவர்கள் வரன் தேடும் காரியத்தில் அனுபவிக்கும் சில கஷ்டங்களை குறைக்கத் திருமண தொடர்பு ஏற்படுத்தும் செயலை வரவேற்கின்றனர். திருமணம் செய்து கொள்ள நிதி வசதியற்றவர்களுக்கு சங்கம் தன் செலவில் திருமணம் செய்விக்க முன் வந்துள்ளதையும் கூட்டுத் திருமணத்தையும் வரவேற்கின்றனர். அடுத்து படித்த - பட்டம் பெற்ற இளைஞர்கள் தங்களது எதிர்கால வாழ்விற்காக இச்சங்கம் எவ்வாறு பயன்படும் என்று எதிர் பார்க்கின்றனர். இதில் தான் நமக்குப் பெரும் பொறுப்பும் - கடமையும் அதிகம் உள்ளதை உணர்கின்றோம். பெரும்பாலோர் பிற்பட்டவர்கள் பட்டியலில் நம் இனத்தவரைச் சேர்க்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றனர். அதற்கான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவின் உறுப்பினர்களைக் கண்டு பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இச்செய்திகள் இளைஞர்களுக்கு இச்சங்கத்தால் பயன் பெறலாம் என்ற தைரியத்தை அளிக்கும் என எண்ணுகிறேன்'' என்று கூறினர்.

திரு. சோம. ராஜகணபதி (உதவி கோட்ட பொறியாளர் திண்டிவனம்) அவர்கள் குடந்தை மாநாட்டு தீர்மானத்தின்படி சைவர்கள் உயர்வு கருதித் தனது வருமானத்தில் 'தயா மூலதனம்' என்று அப்பர் பெருமான் அருளிய அருள் வாக்கின் வழிநின்று ரூ. 100/- நன்கொடையாக சமுதாயப் பணிக்குக் கொடுத்து அப்பர் அடிச்சுவட்டில் நாம் வாழ வேண்டும் என்பதைக் கூறினர்.

புலவர். சுந்தரேசம்பிள்ளை-கலிய பெருமாள்-சீனு வாசம்பிள்ளை சீனு. பாலசுப்பிரமணியம், சிவ சுப்பிரமணியன்- M. பாலசுப்பிர மணியன், B Com., நெய்வேலி முதலானோர் சங்கப் பணிகளைப் பற்றிப் பேசினர்கள்.

திரு. A. முத்துக்குமாரசாமி பிள்ளை, துணைத்தலைவர் கடலூர் அவர்கள் 1983-ம் ஆண்டிற்கான பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டிப் பேசினர்கள்.

# புத்தாண்டுப் பிறப்பு

ஜோதிடம்: A. இராசமாணிக்கம் திருப்பனந்தாள்

சோதிட கணித அஷ்டாங்கத்தில் முதற்பிரிவு திரியாங்கம் அதாவது முதலாவது அங்கம் சதுர்யுகம்.

1. கிரேதாயுகம் ஷூ 17, 28000
2. திரேதாயுகம் ஷூ 12, 96000
3. துவாபரயுகம் ஷூ 8, 64000
4. கலியுகம் ஷூ 4, 32000

இரண்டாவது அங்கம் வருஷ நாமங்கள் அதாவது பிரபவாதி 60 ஆண்டுகளின் நாமங்களாகும்.

மூன்ருவது அங்கம் மாத நாமங்கள் அதாவது சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் முடிய உள்ள மாத நாமங்களாகும்.

இம்மூன்று அங்கங்களையல்லாது பஞ்சாங்கம் என்ற உட்பிரிவு உள்ளது. அதாவது திதி நாமங்கள் 15, வார நாமங்கள் 7, நக்ஷத்திர நாமங்கள் 27, யோக நாமங்கள் 27, கரண நாமங்கள் 11. இவ்விதமாக அஷ்டாங்கங்களாக நம் முன்னேர்கள் பிரித்துக் கணித்து லோகம் உள்ளளவும் விளங்க தந்துள்ளனர்.

இப்பொழுது கலியுகாப்தம் 5084 ருத்திரோத்காரி வருஷப் பிறப்பு ஏற்படுகிறது.

ருத்திரோத்காரி வருஷப்பலன்
வெண்பா

''ஆருத்திரோத் காரி
யஃகங் குறையுமே
மாரியற் பஞ்சோர
பயமாகுமே - பாரிற்
கடைமாறி பெய்யுங்
களவித்து நன்ருய்த்
தடையறவே யுண்டாகுந் தான்.''

என்று இடைக்காடர். ருத்திரோத்காரி வருஷப்பலன் வெண்பாவில் அருளியுள்ளபடி உலகத்திற்கு மிச்சிரபலன் ஏற்படும். ஆயினும் இவ்வாண்டு நவ நாயகர்களின் பலனுலும் ஆண்டுப்பிறப்பின் காலத்திய கிரகங்களின் நிலைமையாலும் சிறந்த பலனே உலகத்திற்கு ஏற்படும்.

நவநாயகர்

''மீனபூர்வ பிரதமரசனுமேட
மாதமுதல் வாரமந்திரி
சேனையாதிபன் சிங்கக் கடகமே
செழித்த பைங்கூழ் சிலைதான்
யாதிபன்,
ஊனமிலா துலையே ரசாதிபதி
பனுற்ற பாடாண
மோங்கு மகரமே
யானதானியம் போக்கு மியாழ்
சூரிய ஞதிரைப்பூணி
மாறிகலக்குமே.''

என்றபடி இவ்வாண்டு சாந்திர சௌர வருஷாதிபதிகளும் திருவாதிரையில் சூரியன் வரும் வாராதிபதியும் மற்றும் 6 நாயகர் களுக்குக் குறிப்பிட்ட மாதப்பிறப் பின் வாராதிபர்களும் பின் குறிப்பிட்டுள்ளபடி வானமண்ட லத்தில் நவநாயகர்களாகி உலகை இரட்சிக்கிறார்கள்.

இராஜா குருபகவான்; மந்திரி குருபகவான்; அர்க்காதிபதி புத பகவான்; சசியாதிபதி சூரிய பகவான்; சேனாதிபதி புத பகவான்; இரசாதிபதி செவ்வாய் பகவான் தானியாதிபதி சுக்கிர பகவான்; மேகாதிபதி புத பகவான்; நீரசாதிபதி சனி பகவான் ஆகிறார்கள்.

இவ்வாண்டில் இராஜாவும் மந்திரியும் குருபகவானாக இருப்ப தனால் உலகத்தில் சுபிட்சம் நிலவும். குருவால் பலகோடி நன்மைகள் உண்டாகும் அக விலை குறைந்து வரும். பெருங் காற்றுடன் மழையும் வருஷிக்கும் மேகங்கள் காற்றினால் அலைக்கப் பட்டு எல்லா பிராந்தியங்களிலும் சமமழை பெய்யும். சகலவகை தானியங்களும் விருத்தியாகி பிரஜைகளுக்கு கிடைக்கும்.

இரும்பு, ஈயம், எண்ணெய், நீலமணிகள் மிகுந்து ஆக்கம் ஏற்படும். தேசங்களில் பிரஜைகள் உலோக வகை தொழில்களில் ஈடுபட்டு நல்ல உழைப்பு மேற் கொள்வர். உலகில் அரசர்கள் உத்தமர்கள் குருமகான்கள் தீர்க்கதரிசிகளின் தர்மசாஸ்திர நீதியுரைகளின் படி நின்று நீதியாக அரசாட்சி செய்வர். வேத பிராம்மணர்கள் ஸ்வதர்மத் தில் நின்று உத்தமான வழியில் நற்காரியங்கள் செய்தும், உலக சுபிட்ச வேதமந்திரயக்ஞங்கள் செய்தும் வருவார்கள். உலகெங்கும் சுபிட்சம் நிலவும்.

## இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

1. இரத்த உயர் அழுத்ததிற்கு (High Blood Presure
வாழைத் தண்டை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் உயர் இரத்த அழுத்தம் குறையும்

2. சிறுநீர்க் கோளாறு (Urine Trouble)
வாழைத் தண்டை உணவில் சேர்த்து வர சிறுநீர்க் கோளாறுகள் நீங்கும்

3. விஷத்தன்மை நீங்க
உணவில் வாழைத் தண்டை சேர்த்து வந்தால் உடலில் உள்ள விஷத்தன்மை நீங்கும்

Dr. N. சடையப்பன் S. M. P.

# சங்கற்பநிராகரணம்.

## உரையும் விளக்கமும்

கு. சுந்தரமூர்த்தி. M A. திருப்பனந்தாள்.

இங்ஙனம் தோன்றப்பட்ட உலகு அழிவற்றதோ, அழிவுடையதோ, அழிவுடையது என்னில், அது அழிவற்றதாய்த் தோன்றுவானேன்? என்னில்,—

சுத்தியாகிய சிப்பியானது வெள்ளியை ஒத்துத் தோன்றினாற் போலத் தோன்றிற்று என்று சொல்லலாமாக அறிவு மயக்கால் அழிவுடைய உலகும் அழிவற்றதாய்த் தோன்றும், ஆனால், அந்தப் பரம்பொருளும் இந்த உலகும் தன்னில் வேறோ? என்னில், அப்பரம் பொருளே இவ்வுலகாகத் தோன்றும் என்று சொல்லும் தன்மையை உடையதாயிருக்கும், அப்பரம்பொருளைப் போல் இராமல் இவ்வுலகு வேற்றுமையாய் இருப்பானேன்? என்னில், சிலம்பியினிடத்து உண்டாகிய சிறிய நூலினையொக்க இவ்வுலகும் அப்பரம்பொருளுக்கு வேற்றுமையைப் பொருந்தியிருக்கும், சிலம்பிநூல்போல் என்று சொல்வது ஒரு தன்மையாயிருந்தது, உலகம் பல்வேறு நிலையதாய் இருப்பானேன்? என்னில், இலையும் பழமும் பூவும் காயும் தோலும் நாரும் வயிரமும் இவையெல்லாம் மரமானது தந்து ஒடுங்கும் தன்மைபோலவும், பெருமையினையுடைய தண்ணீரானது திரையையும் நுரையையும் திவலையையும் குமிழியையும் தந்து ஒடுங்கும் தன்மை போலவும் இப்படி உலகமும் பலவாகத்தோன்றி ஒடுங்கும் என்று சொல்லப்படும். அறிவற்றதாய் உள்ள உலகம் அறிவாயுள்ள பரம்பொருளில் தோன்றுது என்னில், நெல்லானது பதரையும் வைக்கோலையும் தந்த தன்மைபோல அறிவுடைய பரம்பொருளும் அறிவற்ற உலகத்தைத் தந்துநிற்கும், இந்தப் பிரமம் இப்படிச் செய்யவேண்டுவது என்? என்னில், இப்படிச் செய்துவருவது இந்தப் பரம்பொருளினுடைய இயல்பாய் இருப்பது ஒன்று என்றும், பிரமம், இந்த நிலைவேறுபாட்டாலே துன்பப்பட்டிருப்பானேன்? என்னில், இத்தகையநிலை வேறுபாடுகளைப் பெற்றிருப்பது பிரமத்துக்கு விளையாட்டாய் இருப்பதொன்று என்றும், பிரமத்துக்கு இயல்பு என்றும் விளையாட்டு என்றும், எங்கே காணப்பட்டது? என்னில், அநாதியாய் உள்ள வேதங்கள் சொல்லுகையினாலே என்றும், இவ்வுபாதிகள் பலவாகக் காண்பிக்கப்பட்டாற்போல அந்தப்பிரமமும் இப்படிப் பலவாகக் கண்டிருக்கப்பட்டிருக்குமோ? என்னில்., மணிகள் பல நிறமாய் இருந்ததாயினும் அதில்கோப்புண்டால நூல் அந்நிறம்

போல் தோன்றியும் ஒரு தன்மையாய் இருந்தாற்போலவும், பசுக்கள் பலநிறங்களை யுடையதாயிருந்தாலும் பால் ஒரு தன்மையாய் இருந் தாற் போலவும், நீர்பொருந்திய கலங்கள் பலவாய் இருந்ததாயினும் அதில் காணும் உருவெளிப்பாடுடைய ஞாயிறு ஒன்றாய் இருந்த தன்மைபோலவும், கிணறும் கடலும் குளமும் சிறிதாயுள்ள குழிகளும் வாய்க்கால்களும் இவை எல்லாம் பலபேதமாய் இருந்ததாயினும் தண்ணீர் ஒன்றாயிருந்த தன்மை போலவும், இப்படியே பிறப்புக்கள் பலவாறாய் இருந்ததாயினும் அறிவு ஒன்றால் அளவற்ற பிறப்புக்கள் தோறும் கூடியிருக்கும்; (அப்படிப் பிறவிகள் தோறும் கூடியிருந்த தாயின் இந்த உடல்கள்தோறும் கட்டுப்படுத்தப்படாதோ என்னில்) கண்ணாடியிலே தோன்றி நிற்கும் நிழலானது அதில் தோய்வற நின்றாற்போலவும், உடலிலே பிரமமானது தோன்றி நிற்குமிடத்தேயும் அந்த உடலில் தானும் தோய்வற நிற்கும்; அப்படி அந்த உடலிலே தோய்வற நிற்குமாயின் இந்த உடல் செயற்படுவது எப்படி? என்னில், நல்ல காந்தமானது தோய்வற நிற்க, அதன் முன்னிலையிலே இரும்பானது ஈர்க்கப்பட்டாற்போலப் பிரமம் தோய் வற நிற்கஅதன் முன்னிலையில் உடலானது செயற்பட்டு நிற்கும். (அந்த அறிவு இந்த உடலிலே நின்று சுகதுக்கங்களை அநுபவிக்கின்றதே! அதுவருவானேன்? என்னில்,) ஒருவன் கனவு காணுமிடத்து அவனை ஓர் ஆனை பின்பிடித்துக் கொண்டுவர அதற்கு அஞ்சி அவன் ஓடும் இடத்து விழித்த அந்நிலையில் இவையெல்லாம் பொய்யாய் இருந்த தன்மைபோலவும், ஒருவன்இரவில் ஒரு புற்றின் வாயிலிலே கயிறு கிடக்கிறதைக் கண்டு ஒரு பாம்பு கிடப்பதைப் பாரீர் என்று வியந்து நிற்குமிடத்து விடிந்த நிலையில் பாம்பு பொய்யாய்க் கயிறு மெய்யான தன்மைபோலவும், ஒருவன் தண்ணீர் வேட்கையின் மிகுதிகொண்டு கானலைத் தண்ணீர் என்று நினைவுகொண்டு வந்தான், அதனுடைய உண்மையைப் பார்த்தவிடத்து அவனுக்குத் தண்ணீர் பொய்யாய்க் கானல் மெய்யான தன்மைபோலவும், இந்தப்பிரமம் உடலோடும் கூடிநின்று சுகதுக்கங்களைஅனுபவித்தாற்போல இருப்பது ஒழிந்து தன் உண்மைபார்க்குமிடத்து இந்தச் சுகதுக்கங்களும் அந்த அறிவுக்கு உண்டாகாது, இப்போழுது கண்கூடாய்க் கண் முதலிய பொறி களோடும் கூடி அது தானாய் இருவினையைத்துய்ப்பது காணப்பட் டிருக்கிறதே? என்னில், அப்படி அப்பொறிகள் தானாய் நின்ற தாயினும் பிரமத்துக்கு அந்த அநுபோகம் உண்டாகாது (அஃது என்போல? என்னில்) படிகமானது நல்ல பஞ்சவன்னங்களோடும் கூடிஅது தானாய் இருந்ததாயினும் அவையிற்றினோடும் படிகம் ஒரு சற்றும் தோய்வற நின்றாற் போலவும் எனக் கொள்க, இதன்றியும்,

அறிகருவிகள் ஐந்தும் தொழிற்கருவிகள் ஐந்தும் அகக்கருவிகள் நான்கும் ஆகப் பதினன்கோடுப் கூடிப் புருவநடுவில் நனவுநிலையும், அதில் அறிகருவிகளும் தொழிற்கருவிகளும் நிற்க, அகக்கருவிகளோடும் கூடிக் கழுத்தில் கனவு நிலையும், அதில் மனம், புத்தி, அகங்காரம் நிற்கச் சித்தத்தோடு கூடி நெஞ்சில் உறக்க நிலையும் ஆகஇம்மூவகைப் பாடுகளிலும் நாடோறும் பொருந்தி நுகர்ந்து நிற்கும். அறிவானது இப்பாடுகளோடும் கூடித் துய்க்குமாயின் இதற்குப் புண்ணிய பாவப் பிணிப்பில்லையோ? என்னில் உயிர், பாடுகளோடும் கூடிநின்றதாயி னும் அநாதியே புண்ணியபாவப் பிணிப்புக்கள் இந்தப் பிரமத்துக்குச் சாராது; அஃது எத்தன்மையது? என்னில் கண்ணுடியிலே ஒருவன் முகம் தோன்ற அவ்விடத்து அந்த முகத்தின் கண்ணே பாரைக் கோல் கொண்டு பாய்ந்தவிடத்து அந்தக் கண்ணுடி உடைந்துஒழிந்து கண்ணுக்குக் குறைபாடு வராதிருந்தாற்போலும் எனக் கொள்க.

## சீவன்முத்தி இலக்கணம்:

இப்பொழுது நான் சொல்லிவந்த முறைமையிலே இந்தப் பிரமத்தை வருத்திய மாயாவாதைகளில் உண்டாகிய பிறவிப் பிணிப்பு நீங்குகை காரணமாக விண்ணினின்றும் மேகமானது தோன்றி அவ்விண்ணை மறைக்க அதனுல் உண்டாகிய இருளானது நீங்குகை காரணமாக அவ்விண்ணினின்றும் தோன்றி அந்த மேகங்களை நீக்கி விண்ணைத் தூயவெளி ஆக்கிய காற்றைப் போல, அப்பிரமத்தினின்றும் அறிவுணர்வு தோன்றி, இந்தப் பிரமத்துக்கு உண்டாகிய மறைப்புகள் எல்லாவற்றையும், நிலைபெற்று திற்ப தொரு வீட்டை ஒருவன் ஓரொரு வைக்கோலாகவும் ஓரொரு மரமாகவும் நாள்தொறும் பிடுங்கிய பின் அந்த வீடு என்னும் வடிவு இல்லையாய்ப் போன தன்மைபோலவும், மடியாகிய புடவையும் அவ்வாறு ஓரோர் இழையாக வாங்கியபின் புடவை என்னும் தன்மை போனற் போலவும், உலகாகிய பொய்யையும் மண்முதலாகக் கண்டு இது நானல்ல இது நானல்ல என்று ஒதுக்கி அவற்றினின்றும் நீக்கிக் கொண்டுவர அவையும் நீங்கின இடத்து இந்த அறிவானது இந்தப் பிரமம் தானேயாய்த் தன்னிடத்திலே தன் வடிவைத் தானே கண்டு தன்னிடத்தில் உண்டாகிய இன்பத் தைத் தானே துய்த்து குற்றமற்று இருக்கும் தத்துவமசி என்னும் மகாவாக்கியத் தெளிவு கொண்டு அந்தப் பிரமம் தான் என்கிற பிரமஞானத்தைத் தீர விளங்கி, இந்தப் பிரமஞானம் உண்டான இடத்துப் பின்னைச் சற்றும் அசைவு இல்லாதவனுய், கருவி

கரணங்களோடும் கூடிச் சுவை முதலியவற்றை நுகருமிடத்து அசைவு இல்லை என்பது என்னே? என்னில்,

நல்ல நீரானது அசைந்த இடத்து அந்த நீரோடும் கூடின சந்திரனும் ஒக்க அசைந்தாற்போலே இருக்க அந்தச் சந்திரன் உண்மையைப் பார்க்குமிடத்து அதற்கு இல்லையானுற்போல இந்த அறிவும் காணப்படும்.

### பரமுத்தி இலக்கணம்

இந்த உடலை விட்ட நிலையில் (அந்த அறிவும் அந்தப் பிரமமும் ஒன்றுபட்ட இடத்து என்போல? என்னில்) அகன்று இருக்கும் குடத்துக்குள்ளே அகப்பட்டுநின்ற வெளி அது உடைந்த நிலையில் அந்த வெளியும் தானும் ஒன்று பட்டாற்போல ஆம் எனக் கொள்க.

அது நான் என்னும் பிரமஞானத்தை அறிந்து தான் முன்பு செய்துவந்த கன்மங்கள் எல்லாவற்றையும் விடமாட்டாத அறிவில்லாதவர் தாமும், அந்தப் பிரமஞானம் உண்டாதற்கு ஏதுவாய கடமைகளைப் பழகிச்செய்துவர சிறப்பான அறிவு அவர்களுக்கு உண்டாகும். அப்படி உண்டான சிறப்பான அறிவும் தீக்கடை கோலை மேலே வைத்துக்கடைய அதனல் உண்டாகிய நெருப்பு அந்த அரணியையும் கோலினையும் சேரச் சுட்ட தன்மை போலத், தான் ஒன்றும் ஒழிந்து மற்று உண்டாகிய கன்மங்கள் அனைத்தையும் அழித்து விடும்.

அதுவன்றி நிலைபேறு உடையதாய் இருக்கும் முத்தி பொருந்தாது என்று மாயாவாதியானவன் விரித்துச்சொன்னன் என்றவாறு.

அவித்தையினேன் - அறியாமையுடையோன்! மாயாவாதி. (வித்யா - அறிவு. அகரம் எதிர்மறை). அகண்டிதன் - கூறு செய்யப் படாதவன்: யாண்டும் நிறைந்தவன். நிருவிகற்பன் - குணம் குறி முதலியவற்ருல் வேறுபடுதல் இல்லாதவன். நிர்தத்துவன் - தத்துவ எல்லைக்கு அப்பாற்பட்டவன். நிரஞ்சனன் - மறைப்பில்லாதவன். அவித்தை தொத்தாது - (எல்லாப் பொருள்களும் தானேயாய் இருப் பினும்) அவ்வப் பொருள்களின் தன்மையால் கட்டுப்படாதவனுய். மூவா - அழியாத. தாது ஆறு - தோல், எலும்பு, நரம்பு, மச்சை (என்பினுள் இருக்கும் சாரம்), குருதி, வெண்ணீர். ஐங்கோசம்- 1. அன்னமய கோசம் 2. பிராணமய கோசம் 3. மனேமய கோசம்

4. விஞ்ஞானமய கோசம் 5. ஆனந்தமய கோசம். கோசம்-உறையுள்; உயிரை இவ்வைவகை உறையுளும்ஒன்றன்பின் ஒன்றாக மூடியுள்ளது: எல்லாவற்றுக்கும் புறத்தே உள்ள உறையுள் நம் கண்ணால் காணப் படுகின்ற பருவுடம்பேயாம். அன்னமயகோசம் - உணவால் ஆய உறையுள். இதுமேற்கூறிய ஆறுவகைத் தாதுக்களாலும் இயைந்த உறையுளாகும். இதைவிட நுட்பமாக இதற்குள் உள்ளது பிராணமய கோசமாம். இது உயிரது ஆற்றலாக (சிவசத்தி) விளங்கும் உறையுளாம். இதற்குள் உள்ளது மனோமய கோசமாம். மனத்தாலாய உறையுள் இது. இதனின் உள்ளாக விளங்குவது விஞ்ஞானமய கோசமாம். விஞ்ஞானம் - அறிவு. அறிவாலாய உறையுள் இது. இதற்கு உள்ளிருப்பது ஆனந்தமய கோசமாம். இன்ப உணர்வாய உறையுள் இது. சுத்தி - இப்பி. வித்தையில் - அறிவு மயக்கத்தில். உலூதை - சிலந்தி. அசித்து - அறிவற்றது. வான்நாரம் - பெருமை பொருந்திய தண்ணீர். பலாலம் - வைக்கோல். கூவல் - கிணறு. ஆழி - கடல். பதினால் கரணம்-பதினான்கு கருவிகள்: மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் அறிகருவிகள் ஐந்தும், சொல், கால், கை, எருவாய், கருவாய் எனும் தொழிற்கருவிகள் ஐந்தும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அகக்கருவிகள் நான்கும் ஆகப் பதினான்காம். ஒரு மூன்று அவத்தை - நனவு கனவு உறக்கம் ஆகிய மூவகைப்பாடு. தர்ப்பணம் - கண்ணாடி. குற்றி - பருத்த கட்டை. விவேகம் - அறிவு. சாதகம் - மறைப்பு. மன் அகம் - நிலைபெற்றுக் காணப்படும் வீடு. மடி இழை - ஆடையின்கண் உள்ள நூல் இழை தத்துவமசி:- தத் - அது, துவம்-நீ, அசி-இருக்கிறாய், அது நீயாக இருக்கிறாய். அசலனாகிய- (தாம் தெளிந்த உணர்வில்) அசைவில்லாதவனாய். நற்சலம் - நல்ல நீர். சலமதி - நீர் அசையுமிடத்து அதன்கண் தோன்றிய மதியமும் அசைவது போல. அகல் கடத்து - அகன்ற குடத்தினிடத்து. மங்குல் - வெளி.

அரணி - தீக்கடைக்கோல்.

முதல் பத்து வரிகளில் பிரமப் பொருளின் இயல்பு விரித்துரைக் படுகிறது. அப்பிரமமே இவ்வுலகாகத் தோற்றம் அளிக்குமாற்றை அடுத்த மூன்று வரிகளில் விவரிக்கப்படுகிறது. பொன்னானது பல அணிகளாய் நிலவியவாறு போலப் பரம்பொருளும் ஐம்பூதம், அறுவகைத்தாது, ஐங்கோசம் முதலிய யாக்கைப் பகுதிகளாகத் தோன்றும். தூய சிப்பியானது வெள்ளி போலத் தோன்றும். அது

போலத் தோற்றமாய இவ்வுலகம் நிலைபெற்றதாகத் தோன்றும் இதற்குக் காரணம் அறியாமை (மித்தை) யே யாகும். சிலந்தியானது தன்னிடத்தினின்றும் நூலை உளதாக்கிச் சின்னுள் வைத்திருந்து பின்பு அந்நூல் அழிய நீங்குவது போலப் பிரமமும் உலகைத் தன்னிடத்தினின்றும் தோற்றுவித்துக் காத்து இறுதியில் அதனை இலதாக்கும். சிலந்தியின் நூல் ஒருதன்மைத்தாய் இருக்க இவ்வுலகம் பலவகைத்தாய் உளதெனின் ஒன்றிலிருந்து தோன்றுவன ஒருவகைத்தாகவே இருக்கவேண்டும் என்னும் யாப்புறவின்று. மரம் ஒன்றே எனினும் அதனிடத்தினின்றும் இலை கனி பூ தோல் நார் காழ்ப்பு முதலிய பலபொருள்கள் தோன்றுகின்றன. நீர் ஒன்றாக இருந்தும் அதனிடத்தினின்றும் அலை நுரை திவலை குமிழ் முதலிய பல பொருள்கள் விளங்குகின்றன. இவ்வாறே ஒன்றாகிய பிரமத்திலிருந்தும் பலவாகிய இவ்வுலகம் தோன்றி விளங்குகிறது. அறிவாகிய பிரமத்தினின்றும் அறிவற்ற உலகம் தோன்றுமோ எனின் தோன்றும். இது நெல் பதரையும் வைக்கோலையும் தருதல்போலாம். இவ்வாறு தன்னிடத்தினின்றும் இவ்வுலகைத் தோற்றுவிப்பது அப்பிரமத்தின் இயல்பாம். அச்செயலால் எவ்வித மாற்றமுமின்றி இருப்பது அப்பிரமத்தின் விளையாட்டாகும். இது மறை பகரும் உண்மையாகும். பிரமம் பலஉடல்களில் தோன்றுவதால் பலவாகுமோ எனில் ஆகாது. பல்வேறு நிறமுடைய மணிகளைக் கோத்துள்ள நூல் அம் மணிகளின் சார்வால் பல நிறமுடையதாகத் தோன்றும் எனினும் அந்நூல் ஒருதன்மைத்தேயாம். இவ்வாறே பசுக்கள் பல்வேறு நிறமுடையனவாக இருப்பினும் அவற்றின் பால் ஒரு நிறம் உடையதாக இருக்கும். நீருடைய கலன்கள் பலவற்றிலும் நிழலிடும் கதிரவன் பல இருப்பினும் கதிரவன் ஒன்றேயாம். குளம் கூவல் குழி வாய்க்கால் முதலாக நீர்நிலைகள் பல இருப்பினும் அவற்றில் காணும் நீர் ஒன்றேயாம். இவற்றைப் போன்றே பலவுடல்களில் பிரமம் தோன்றினும் அப்பிரமம் ஒன்றேயாம். இவ்வாறு பல்வேறு உடல்கள் தோறும் பிரமம் நிற்பினும் அவ்வுடல்வழித் தோன்றும் இன்பதுன்ப நுகர்வுகளை அப்பிரமம் அடையாது. அது கண்ணாடியில் தோன்றும் நிழல் போல்வதாம். இவ்வாறு பிரமம் உடலொடு ஒன்றிப் பற்றாதாயின் உடல் செயற்படுவது எங்ஙனம் எனில் அசைவற நிற்கும் காந்தத்தின்முன் இரும்பு தொழிற்படுவதுபோல இவ்வுடல்களும் தொழிற்படுமாம். உயிரோடு கூடிய பிரமம் இன்ப துன்ப நுகர்வுகளைப்பெற்றிருப்பது போலக் காண்பது என்போலவென்னின் கனவில் யானையால் பிணிக்கக் கண்டவன் விழித்தவுடன் அதனைப் பொய்யாகக் காணுதல் போலவும், கானல் நீர்போல் தோன்றி

நெருங்கியவுடன் பொய்யாவது போலவும், இரவில் புற்றின் அருகே கிடக்கும் கயிற்றைப் பாம்பெனக் கருதப் பொழுது புலர்ந்தநிலையில் அது பொய்யானது போலவும் ஆம். அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டுண்ட உயிர் தனது செயலால் அவை அருகவும் பெருகவும் பெற்று நிற்க, அதனொடு சார்ந்த பிரமமும் அக்கட்டின் வழி உளதாய நுகர்வும் அதன்வழித் துன்பமும் பெறுதோ எனின் பெறுது. கண்ணாடியில் தோன்றும் உருவத்தைக் கண்ட ஒருவன் கருவி கொண்டு அக் கண்ணாடியைக் குத்தினும் அதனகத்துத் தோன்றிய நிழற்கு ஊறு நேராதவாறு போலாம்.

இவ்வாறு பிரமத்தின் வாயிலாகத் தோன்றிய பொருள்கள் பலவற்றிற்கும் ஏற்பட்ட துன்பம் தாம் அல்லாத அத்தனையும் தாமென்று கருதியவழியேயாம். அத்தகைய புல்லறிவு நீங்க நல்லறிவு நிறைப்புழி அத்துன்பங்கள் நீங்கும். வானில் தோன்றிய வளியால் மேகப்படலம் நீங்குமாறு போலப் பிரமத்திடத்தே தோன்றிய ஞானத்தால் இத்தகைய கருவிகள் கழலும். ஒரு வீட்டின் பகுதியாய் விளங்கும் ஓடு தூண் முதலியவற்றை ஒவ்வொன்றாகப் பிரித்தெறிய வீடு இல்லாதது போலவும், ஓர் ஆடையின்கண் உள்ள நூல்இழைகளை ஒவ்வொன்றாகப் பிரித்து ஒழிக்க அவ்வாடை இலதாதல் போலவும் உலகப் பகுதிகளையும் நானல்லல் நானல்ல என்று கழித்து ஒழிக்க அவ்வுலகம் என்பது இன்றாகும். அவ்வாறு உண்டாகவே தானே பிரமம் என்னும் நிலை உண்டாகும். அக்காட்சியால் உளதாகும் இன்பை நுகர்வதே ஞான முடிபாம். உயிர் பொறிவழிப் புலன்களை நுகர்ந்து இன்ப துன்பங்களைத் துய்க்கும்பொழுது அதுவாக விளங்கும் பிரமம், எவ்வாறு அசைவற்று இருக்குமெனின், நீரில் காணும் மதியின் நிழல் அசைவுறினும் உண்மையான மதிக்கு அவ்வசைவு இலதாதல் போலவாம்.

உடல் தொடர்பு அற்ற உயிர் பிரமத்துடன் ஒன்றுதல், குடத்துள் இருக்கும் வெளி அக்குடம் உடைந்தவிடத்து விண்வெளியொடு ஒன்றிவிடுவது போலவாம்.

இவ்வாறு பெறத்தகும் பிரம ஞானத்தைப் பெற அறியாதார் அது தோன்றுதற்குரிய கடமைகளைச் செய்ய அதனைப் பெறலாகும். தீயைக் கடைந்த விடத்துத் தோன்றும் தீ, அக்கோலையும் கட்டையையும் அழித்தாற் போலச் சிறப்பாகச் செய்யும் கடமைகளால் தோன்றும் பிரமஞானம், அச்செயற்பாடுகளை ஒழித்துப் பிரமத்துடன் சேர்த்துவிடும்.

உரைதரு பிரமம் ஒன்றெனும் உரைக்கண்
வருபிர மாணம் மறையெனில் அருமறை
ஒன்றுஎன்ற தன்றி இருபொருள் உரைத்தல்
நன்றன்று அபேதம் நாடிய பொருளேல்
பேதமும் அபேதமும் ஓத வேண்டா
பேதம் எனினும் அபேதம் எனினும்
பேதா பேதம் எனினும் அமையும்நின்
ஐயமில் உரையிற் பையவந் துளதாம்
திகழ்பிர மாண இகழ்வும்உண் டன்றிப்
பெத்தம் பேதம் முத்தி அபேதமேல்
அநவத் திதமாம் அவையிரு திறனும்
இனியப் பழமொழி இரண்டல ஒன்றேல்
அன்றியும் பெத்தம் பேதத்து அறைதலும்
ஒன்றிய முத்தி அபேதத்து உரைத்தலும்
பழுதாம் இத்திறம் பதையாது ஆய்கமற்று
எழுதா மொழியெனும் இப்பிர மாணம்
ஆர்உரை? தானே யாயின தேல்உனது
ஏகம் அனேகம் உறும்இயம் பாமல்
சத்த ரூபந் தகாதெனில் வானத்து
ஒத்தொலி உறமும் எனில்வறிது உதியாது
அன்றியும் பதமும் பாழியும் அனைத்தும்
இன்றிஓர் ஒலியாய் எழுந்திடும் அதனுக்கு
அறிவிலது உருவிலது அறியா அறையாது
அன்றியும் அவ்வகை அகண்டிதம் அதுஇது
என்றது குறிப்பது எவ்வகை? யாவும்
ஒன்றெனும் உரையும் ஒழிந்தனை யன்றே
அருமறை பிரம வுரையெனின் அதற்குத்
தந்தம் தாலு முதல்நவில் பொறியிலது
என்னில்ஓர் உடற்கண் மன்னிய அலகை
அறைந்தற்று என்ப தார்சொல்? அதுஅமலத்
திறம்பெற் றின்றே செய்தோர் பெயராற்
சுயம்பு வென்றுல கியம்பும்என் றறிஇனித்
தற்கீழ்த் தலைவரைத் தான்தொழு துரைக்கும்
சொற்கேற் புரவலன் ஏவல் அமைச்சரை
அடிகள் மற்றெம் குடிமுழு தாள்மின்என்று
ஏத்தி இறைஞ்சிற் காப்பர்கள் என்றுங்கு

# திருவிளையாடற் புராணம்

உரை நடை

## சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வேண்டுதல்

மாணிக்கவாசகர் பொற்றாமரைத் தீர்த்தத்திலே நீராடிச் சித்தி விநாயகரின திருவடிகளை வணங்கித், தானே மூளைத்த சிவக் கொழுந்தை - அங்கயற்கண் அம்மை என்னும் கொடியின் மருங்கில் விளைந்த தேனைப் பருகி, மனம், மெய், மொழி என்னும் மூன்று கரணங்களும் அன்பு வடிவாய்த் தோன்றி நின்று, ''தலைவரே! அடியேனை ஆட்கொண்டருளிய மாணிக்கமே! வெள்ளிமன்றினுள் ஆடும் அன்பையே! அடியேன் வேண்டிக்கொண்ட வண்ணமே முன்னே பாண்டியன் அளித்த பொருள் முழுதையும் முதலில் ஏற்றுக் கொண்டு, பின் அடியேன் பணியையும் கொண்டருளினீர்; பாண்டியன் சினங்கொள்ளாது மிக மகிழ்ச்சி அடையும்படி குதிரைகள் வருதல் எங்ஙனம்?'' என்று வேண்டி நின்றார். அப்போது இறைவன், ''மெய்யன்புடையாய்! அஞ்சேல்! நீ விரும்பிய படி சூரியனுடைய தேரை இழுத்துச் செல்லும் குதிரைகள் போலும் குதிரைகளைக் கொண்டு வருகின்றோம்'' என்று வானின்கண் அசரீரியாக மொழிந்தருளினார். அதனைக் கேட்டு மகிழ்ந்த வாதவூரர் இறைவன் திருவருளைத் துதித்துத் தமது மாளிகைக்குச் சென்றார்

## உறவினர் முதலியோர் இடித்துக் கூறுதல்

திருவாதவூரர், தமது மாளிகையை அடைந்தபொழுது அவருடைய [1]சுற்றத்தார்களும், நட்பினரும், அன்பு மிகுந்த பணி யாளரும், அயலாரும், பிறரும் வந்து நெருங்கி இடிக்கும் மேகம் வாய் திறந்தாற்போல, ''ஐயனே! அமைச்சுத் தொழில் பூண்டு அரசரது பணிபுரிதல் அந்தணருக்குரிய தருமமன்று; அரசருக்குரிய மந்திரியாக இருந்தால் ஏற்ற காரியங்களையே செய்ய வேண்டும் என்று மனுநூல் வல்லோர் கூறுவர். அரசியலையும் அமைச்சர் நீதியையும் ஆய்ந்தறிந்த உங்களுக்கு நாங்கள் சொல்லக் கிடப்பது யாது? நீர் செய்யும் காரியம் ஒன்றும் நன்றாயிருக்கவில்லை. இன்றைக்குக் குதிரைகள் வரும் என்று வரையறுத்துச் சொன்னீர். ஐயனே! குதிரை வராவிடில் அரசனுக்கு நாளை என்ன சொல்ல

---

1. இச் சுற்றத்தார் மானமங்கலத்தார் ஆவர். மானமங்கலம் என்பதுஒரு ஊர். இவ்வூர்'மானபுரம்' என வழங்குகிறது.

வல்லீரோ? நீர் அரசரிடத்தில் நடந்துகொள்ளும் விதத்தினாலே உம்மைத் தழுவிய கிளைஞர், நட்பினர், சான்றோர் முதலாகிய கூட்டத்தைக் காக்கவேண்டும் என்னும் குறிப்பு உமக்கில்லை போலும்!'' என்று கழறியுரைத்தார்கள்.

வாதவூரரின் மனத் தெளிவு

திருவாதவூரர் அவற்றைக் கேட்டு, ''சிவபெருமான் தம் அருட் கோலத்தைக் காட்டி நம்மை ஆட்கொண்ட அன்றைக்கே சுற்றத்தையும், அது பற்றிவரும தொடர்புகளையும் துறந்தேம்; துன்பமும இன்பமும் அற்றேம; இவ்வுடலின பற்றினையும் நீங்கினேம்; செல்வத்தை வெறுத்தேம்; கோபத்தையும் செருக்கையும கெடுத்தேம்; நல்வினை தீவினை என்னும் இரண்டினின்றும் நீங்கினேம்; எமக்குத் தந்தையும், தாயும், குருவும், ஆசானும் சிவபெருமானே; பெண்டிர் நிராசையே; மக்கள் பல உயிர்களே; சுற்றம் சிவனடியார்களே; பகை எழு பிறவியே; ஊரிலுள்ளவர் சமைக்கும் சோறெல்லாம் நம்முடையதே; நிலவுலகு முற்றும் நமக்குப் படுக்கையே; தைத்த கோவணம நாம் தரிக்கும ஆடையே; நமக்குச் சந்தனம் திருநீறே; அணிகலன் உருத்திராக்கமே; நாம் இன்றைக்கே இறந்தாலும் இறக்கக் கடவேம்; என்றும் அழியாமல் இருந்தாலும் இருக்கக் கடவேம்; மன்னவன் தண்டித்தாலும் தண்டிக்கக் கடவன்; அவன் உடனே நமக்கு மகிழ்ச்சியை ஊட்டினும் ஊட்டக் கடவன்; நாம் சுவர்க்கத்திற் சென்று சிறப்படையினும் அடையக் கடவேம்; கொடிய நரகம் கிட்டினும் கிட்டக்கடவம். நாம் சிவனை மறவோம்: பண்டைப் பழவினைப்பயன அனுபவிக்க வேண்டி வந்தால் அதனைத் தவிர்க்க வல்லவர் யாவர்!'' என்று சுற்றத்தார் முதலாயினோர் சொல்லை மறுத்துக் கூறி மாளிகையில் இருந்தார்.

செய்யுள்—89
ஆகச் செய்யுள்—2789

## 59. நரி பரியாக்கிய படலம்

பாண்டியன வாதவூரரைக் குதிரைவரும் நாளை வினவல்

சுற்றமாகிய பாசத்தினின்றும் நீங்கி ஆணவ மலத்தை அறுத்துச் சிவயோகத்தில் நின்ற வாதவூரடிகளை அரிமர்த்தன பாண்டியன் மற்றைநாள் தன்னிடம் அழைத்து, ''இன்னும் குதிரைகள் வந்தில போலும்'' என வினவினன். அதற்கு மாணிக்கவாசகர், 'இன்று

மதல் மூன்று நாளைக்குள் குதிரைகள் வந்துவிடும்; அக் குதிரைகள் நிற்றற்கு வேறு அகன்ற பந்திகளை (லாயத்தை) அமைப்பிக்க; அக் குதிரைகளுக்குத் தண்ணீர் ஊட்டுதற் பொருட்டுத் தடாகங்களைத் தோண்டுவிக்க; நகரெங்கும் அலங்கரிப்பிக்க'' என்று வேண்டிக் கொண்டார். பாண்டியனின் ஆணைப்படி அவன் ஏவலாளர் குதிரைப் பந்திகளை அமைத்தனர்; பல வாவிகளையுங் குளங்களையும் தோண்டினர்; நகரை அழகுபெற அலங்கரித்தனர்.

பாண்டியன் வாதவூரரைத் துன்புறுத்தச் செய்தல்

இவ்வாறு இருக்கும் போது வாதவூரடிகள் குதிரை வரும் என்று வரையறுத்துக் கூறிய மூன்று நாளும் கழிந்தன. பாண்டியன் மற்றை நாள், ''இன்னும குதிரைகள் வரக் கண்டிலம்'' என்று கருதி. மாணிக்க வாசகர் என்னும் அமைச்சரை அழைப்பித்துத் தண்டிப்பவன் போன்று சினந்து, ''இவன் குதிரைகள் வாங்கியவாறு என்னே! அவை வந்தல் எப்பொழுதோ?'' என்று கூறித் தன்னெதிர் நின்ற தறுகண்மையையுடைய தண்டலாளர் சிலரை நோக்கி, ''இக் கள்வனைக் கொண்டு சென்று தண்டித்து நமது பொன் முழுதையும் அறுதியாக வாங்குங்கள்; விரைந்து செல்லுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

வாதவூரரைத் தண்டலாளர் துன்புறுத்தல்

பாண்டியனுடைய கோபத்தைக் கண்ட தண்டலாளர்கள் பயந்து அவனெதிர் நில்லாமல் உடனே வாதவூரடிகளைச் சுற்றிய பாசம் போலத் தொடர்ந்து பற்றிக்கொண்டு சென்று, ''இனிப் பொன் கொடுப்பதற்கு வகை யாது? கூறும்'' என்று எதிர்த்துச் சீறி அவர் மேல் பரஞ் செறிந்த கல்லை ஏற்றினார்கள். அப்போது முப்புரங்களையும் நீறாக்கிய வீரராகிய சிவபெருமானின் திருவடியை வாதவூரடிகள் மனத்தின்கண் நினைக்க அப்பெரிய சுமை அனைத்தையும் இறைவர் தாங்கச் சிறிதும் துன்பமின்றி நின்றார். கல்லின் பாரந் தெரியாது சிவபெருமான் திருவடி நீழலில் நின்ற வாதவூரடிகளின் நிலைமையைத் தண்டலாளர்கள் நோக்கி, ''இஃது ஒரு மாய வழி போலும்'' என்று கருதி மிகுந்த கோபங்கொண்டு அவருடைய கைகளிலும் கால்களிலும் கிட்டியை மாட்டி நெறித்தார்கள். வாதவூரர் இக் கொடுந் தொழிலுக்கும் அஞ்சாமல் இறைவன் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு துன்பமின்றி இருந்தார்.

மாலைக்காலம் முதலிய வருணனை

அப்பொழுது, ''இக்கொடிய தண்டலாளர் இனி மிகவும் தண்டிப்பர்'' என்று கருதி அதனைப் பார்ப்பதற்கு மனம் வருந்திய சூரியன் மேற்குக் கடலில் சென்று மறைந்தான். சோமசுந்தரக் கடவுள் தம் அடியார் துயரை அகற்றுதற்கு நேரே வந்து எழுந்த தோற்றம் போலச் செவ்வானம் தோன்றியது; அப் பெருமான் திருமார்பில் கிடந்து அசையும் பன்றிக் கொம்பினைப் போல வெண்மதி விளங்கியது; அவர் திருமார்பில் அணிந்த பிரமனது சிரமாலை போல நட்சத்திரங்களனைத்தும் திகழ்ந்தன.

சுந்தர [1]விடங்கர் அன்பர் சூழ்துயர் அகற்ற நேரே
வந்தெழு காட்சி போல வந்தது செக்கர் வானம்;
இந்தவர் மார்பந் தூங்கும் ஏனவெண் கோடு போன்ற(து)
அந்தர வுடுக்க ளெல்லாம் அயன்றலை மாலை ஒத்த.

சுழித்து வரும் பிறவித் துன்பமாகிய கடலிலே அழுந்தி வீணே கழிகின்ற தன்னைக் காத்தல் பொருட்டுக் கண்ணுதற் கடவுளின் திருவடியை வழிபடும் அடியவரை அறியாதவனாய் அருஞ்சிறைப் படுத்திய பாண்டியனது பழிபட்ட புகழ் பரவியதுபோல, நிறைந்த இருள் எங்கும் பரவியது.

வாதவூரரைச் சிறையிடல்

அன்றிரவு, இருண்ட சிறைக்கூடத்திலே தள்ளித் தவத்தினை விலங்கு பூட்டிச் சிறைப்படுத்தினாற்போலச் சினமிக்க தண்டலாளர் வாதவூரடிகளைச் சிறைப்படுத்தி விலங்கிட்டுத் துன்பஞ் செய்தனர். கொடிய சிறையாகிய கடலில் அழுந்திக் கிடந்த வாதவூரடிகள், பரமசிவனுடைய திருவடிப் புணையைத் துணையாகக்கொண்டு துன்பமாகிய கடலைக் கடந்தார்; இராக்காலம் கழிந்தது. பின்பு, வைகறையிலே மெய்யடியார்கள் சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியம்மையாரையும் திருப்பள்ளியெழுச்சி செய்து வழிபடும் ஆர்ப்பையும், சங்குகளின் ஒலியையும், வேதவொலியையும் தம் செவிகள் நிறையுமாறு வாதவூரர் கேட்டிருந்தார்.

சூரியன் தோன்றுதல்

சிவபெருமான், உண்மைத் தொண்டராகிய மாணிக்க வாசகர் பொருட்டு, நாத தத்துவமாகிய முரசு ஒலிக்கவும், நரியாகிய குதிரை

1. விடங்கர் - அழகர்; உளியினால் செதுக்கப்படாதவர்.

பின் வீரர் சூழவும், வேதமாகிய குதிரையின் மேல் ஏறியருளி மதுரைத் திருவீதியின்கண் வருதலைக் காணும் விருப்புடையவன் போலச் சூரியன் கீழ்த்திசையில் உதயமானன்.

போதவா னந்தச் சோதி புனிதமெய்த் தொண்டர்க் காக
நாதமா முரசம் ஆர்ப்ப நரிப்பரி வயவர் சூழ
வேதவாம் பரிமேற் கொண்டு வீதியில் வரவு காணும்
காதலான் போலத் தேர்மேற் கதிரவன் உதயஞ் செய்தான்.

வாதவூரர் சோமசுந்தரக் கடவுளைத் தோத்திரஞ் செய்தல்

மிக்க மணம் பொருந்திய மலர்ப்பள்ளியினின்றும் மீனுட்சியம்மையோடுந் துயிலுணர்ந்திருந்த சோமசுந்தரக் கடவுளாகிய அருள் வெள்ளம் எழுந்தருளிய விண்ணிழி விமானத்தை நோக்கிக் கைகளைச் சிரசின்மேற் குவித்து ஆனந்த வருவி ஒழுக வாதவூரர் இறைவனைத் தோத்திரஞ் செய்வாராயினர்:

எந்தாய்! அனைத்துலகும் ஈன்ருய்! எத் தேவர்க்குந்
தந்தாய்! செழுங்குவளைத் தாராய்! பெருந்துறையில்
வந்தாய்! மதுரைத் திருவால வாயுறையுஞ்
சிந்தா மணியே! சிறியேற்(கு) இரங்காயோ?

மூவா முதலாய் முதுமறையாய் அம்மறையுந்
தாவாத சோதித் தனிஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திருவால வாயுறை
ஆவார் கொடியாய்! அடியேற்(கு) இரங்காயோ?

முன்னும் முதுபொருட்கும் முன்னும் முதுபொருளாய்ப்
பின்னும் புதுமைக்கும் பின்னுகும் பேரொளியாய்த்
தென்ன! மதுரைத் திருவால வாயுறையும்
என்னு யகனே! எளியேற் (கு) இரங்காயோ?

மண்ணாய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி
விண்ணாய் இருசுடராய் இத்தனையும் வேருகிப்
பண்ணாய் இசையாய்ப் பனுவலாய் எங்கண்ணுங்
கண்ணுனாய்! எல் உறுகண் காணுவா(று) என்கொலோ?

பொங்குஞ் சினமடங்கல் போன்றுருத்து வெங்கூற்றம்
அங்கும் புரியா அருந்துன்பத்(து) ஆழ்ந்துநான்
மங்கும் படியறிந்தும் வந்(து) அஞ்சல்! என்கிலையால்;
எங்குஞ் செவியுடையாய்! கேளாயோ? என்னுரையே.

பூட்டியருட் பாசமிரு பாதம் பொறித்துடலிற்
கூட்டி அடியாருள் அகப்படுத்தாட் கொண்டருமை
காட்டியவோ! இன்றென்னைக் கைவிட்டாய்; வெய்யரெனை
ஆட்டி ஒறுக்குமிடத்(து) ஆர்ஏன்று சொல்வாரே?

ஊரார் உனைச்சிரிப்ப(து) ஓராய்என் றுன்னடிமைக்(கு)
ஆராய் அடியேன் அயர்வேன்; அஃதறிந்தும்
வாராய்; அரசன் தமர்இழைக்கும் வன்கண்ணை
பாராய்; உன் தன்மை இதுவோ? பரமேட்டி.

இறைவன் கணநாதர்களை நரிகளைப் பரிகளாக்க ஏவுதல்

இவ்வாறு வருந்தும் வாதவூரடிகளின் முறையீட்டொலி குழந்தைகளுடைய அழுகையொலி தாயார் செவியிற் புகுந்தது போலத் தமது திருச்செவியில் நுழைதலும் சிவபெருமான் வாதவூரரைச் சிறையினின்று நீக்கத் திருவுளங்கொண்டு நந்திதேவர் முதலிய கணநாதர்களை அழைத்தருளினார்; அவரனைவரும் வந்து வணங்கி நின்றனர்; ''ஆவணி மாதத்து மூலநாள் [1]முற்பட்டே வந்துவிட்டது; இன்றைக்கு நாம முற்பட்டுப பாண்டியன் சினங்கொள்ளா முன்னே குதிரைகளையெல்லாம் கொண்டுபோய்க் கொடுத்தல் வேண்டும்; நீவிர் அனைவரும் காட்டில் உலவும் நரிகளனைத்தையும் கொண்டு வந்து தாவிச் செல்லும் குதிரைகளாக்கி நீங்கள் யாவரும் குதிரைச் சேவகர்களாய் அவற்றின் மீது ஏறிக்கொண்டு முன்னே செல்லுங்கள். நாமும் நோக்குவோர்க்குக் குதிரைச் சேவகர் என்னும் கருத்து உண்டாக அவ்வாறே வருகின்றோம்'' என்று அருளிச் செய்தார். அவ்வாணையை மேற்கொண்டு சிவகண நாதர்கள் நரிகளையெல்லாம் [2]ஓரிடஞ் சேர்த்துக் குதிரைகளாகச் [3]செய்து தாம் அக் குதிரைகளை நடாத்துகின்ற சேவகராயினர்.

---

1. ஆவணி மூல நாள் ஆடி மாதத்தின் இறுதியில் வந்தமையால், 'முற்பட்டே வந்துவிட்டது' என்றார்.

2. இந்த இடம் தற்போது 'நரிக்குடி' என வழங்குகிறது. இது மதுரைக்கு மேற்கே உள்ளது என்பர்.

3. இங்கு. ''அரியோடு பிரமற் களவறி யொண்ணான், நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்'' (திருவாசகம் - கீர்த்தித் திருவகவல்) எனவும், ''நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்து'' (திருவாசகம் - ஆனந்தமாலை) எனவும் வரும் அடிகள் கருதற்பாலன.

## கணநாதராகிய குதிரை வீரர்கள்

அக் குதிரைச் சேவகர்களெல்லாம் செம்பட்டாடையைத் தூக்கிக் கட்டினர்; உடை வாளினை இடையில் அணிந்தனர்; காலில் செருப்பினையும் உடலில் கவசத்தினையும் தரித்தனர்; திருநீற்றினை முப்பட்டையாக நெற்றியில் அணிந்தனர்; கண்டோர் அஞ்சுமாறு கண்களையும், இடிபோலும் தாக்கி ஒலி எழும் நகையினையும், மிக்க கோபத்தினையும் கொண்டவராய் விளங்கினர். அவர்களுட் சிலர் வட்டமாகிய கேடகத்தையும் கூரிய வாட்படையினையும் ஏந்தி நின்றனர் சிலர் நீண்ட தண்டத்தைச் சுழற்றிய வண்ணம் நின்றனர் சிலர் அம்புக் கூட்டினையும் வில்லினையும் தாங்கி நின்றனர்.

சிவந்த ஆடையாற் செய்த போர்வையினையுடையவர் சிலர்; பசிய ஆடையால் தோளில் இறுக்கிக் கட்டிய கவச முடையவர் சிலர்; கரிய மேகம் போல நீல ஆடையால் செய்த கவசத்தைத் தோளில் அணிந்தவர் சிலர். பொன்னிறமான ஆடையாற் செய்த சட்டையுடையவர் சிலர்; பீலிக் குஞ்சங் கட்டிய குடையினர் பலர்; கவரிமாவின் வால் கொண்டு தைத்த தண்ணிய குடையினர் பலர்; சுற்றிலும் சல்லி தொங்கும் குடையினர் பலர்; முத்துக்கள் நிறைந்த வெண்குடையினர் பலர்.

## இறைவன் மறைப்பரி வீரராக எழுந்தருளல்

தொண்டர்களின் பாசமாகிய கட்டினை அவிழ்க்க எழுந்தருளும் பரஞ்சோதியாகிய சோமசுந்தரக் கடவுள், அமைச்சராகிய வாதவூரடிகளின் பொருட்டல்லாமல் அரிமருத்தன பாண்டியன் பிறப்பினை அறுக்கும் பொருட்டும், திருவடியில் வீரக் கழலை அணிந்து, திருக்கரத்தில் அகவிருளையும் புறவிருளையும் போக்கி ஒளி வீசும் ஞான வாளை ஏந்தி, ஒரு புறஞ் சாய்ந்த கொண்டையும், திருமுடிப்பாகையும், வைரம் பதித்த கண்டிகைகளும், வீரவளைகளும், குண்டலங்களும், விபூதியைத் திரிபுண்டரமாக அணிந்த நெற்றியும், வெள்ளிய ஆடையும், கவசமும் ஆகிய இவை மெய்ப்பொருளை ஆராய்ந்தறிந்த அடியார்களின் மனத்தினின்றும் நீங்காயல் அழகு வீச, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு கால்களையுட், ஞான காண்டம், கருமகாண்டம் என்கின்ற செவிகளையும், பரஞானம் அபர ஞானமாகிய இரண்டு கண்களையும், அரிய விதியாகிய முகத்தினையும், விலக்காகிய வாலையும், ஆகமங்களாகிய புறவணிகளையும், ஆகம மந்திரங்களாகிய சதங்கை மாலை, கிண்கிணி மாலை சிலப்பு

முதலியவற்றையும், இரு மருங்கு சூரிய சந்திரர்களாகிய அங்கவடிகளையும், பிரணவமாகிய கடிவாளத்தையும், உபநிடதமாகிய கல்லணையையும், புறச் சமயங்களாகிய சேனைகள் சிதறி ஓடும் வண்ணம் கோபங்கொண்டு போர் செய்யும் வல்லமையையும், நான்முகனின் முகங்களாகிய இலாயத்தையும் கொண்ட வேதமாகிய குதிரையின்மேல் எழுந்தருளினார்[1].

அப்போது 'பிறப்பில் விருப்புடையவர்களெல்லாம் மறந்தும் இப்பக்கம் வராதீர்கள்; பிறப்பினைப் போக்கும் விருப்புடையவர்களெல்லாம் விரைந்து ஓடி வாருங்கள்[2]; மாணிக்கவாசகருக்குப் பாண்டியன் செய்யும் துன்பத்தினைப் போக்கும் பொருட்டு வருதல் போல இறைவன் உங்கள் பிறவியினை ஒழிக்க வந்தனன்' என்று கூறுதல் போலச் குதிரையின் காற்சிலம்புகள் ஒலித்தன. காவிரி, துங்கபத்திரை முதலாகிய நதிகள், "கங்கையைச் சடையில் மறைத்து வைத்தருளினை; அவளை ஒளித்தது போல எங்களையும் ஒளித்தருளுவாயாக'' என்று குறையிரந்து சூழ்ந்து பொங்கி வீழ்வனபோல, மேலாடையும் சாமரையும் புரண்டன. கலைமகள் சோமசுந்தரக் கடவுள் நான்கு வேதங்களையும் குதிரையாகக்கொண்டு வந்தனர் என்று கருதித் தான் ஒரு வெள்ளிய குடையாகிக் கவிந்தாற்போல, வெண்கவிகை திருமுடியின்மேல் பால்போன்ற நிலவினை வீசியது. பதினெண் புராணங்கள், "இவன்தான் நாங்கள் கூறும் இறைவன்; படைத்துக் காத்து அழிப்பவனும் இவனேதான்; வேதங்களெல்லாம் முறையிடும் பரம்பொருளும் இவனேதான்'' என்று வாய்விட்டுக் கூறுவன போலப் பதினெட்டு வகை வாத்தியங்கள் முழங்கின.

---

1. இங்கு ''மதுரைப் பெருநன் மாநகர் இருந்து, குதிரைச் சேவகனாகிய கொள்கையும்" (திருவாசகம் - கீர்த்தித் திருவகவல்) எனவும், ''பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார்'' (திருவாசகம் - திருப்பாண்டிப் பதிகம்) எனவும், ''தேவருங் காணாச் சிவபெருமான் - மாவேறி, வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க'' (திருவாசகம் - திருவெண்பா) எனவும் வரும் அடிகள் சிந்திக்கற்பாலன.

2. இங்கே, ''செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின் தென்னனன்னாட்(டு), இறைவன் கிளர்கின்ற காலமிக் காலம் எக்காலத்துள்ளும், அறிவொண் கதிர்வாள் உறைகழித் தானந்த மாக்கடவி, எறியும் பிறப்பை எதிர்ந்தனர் புரள இருநிலத்தே'' (திருவாசகம் - திருப்பாண்டிப் பதிகம்) என வரும் பாடல் சிந்திக்கற்பாலது.